நல்லூர் மகோற்சவ
சிறப்பிதழ் – 03



உன்னையொழிய ஒருவரையும்
நம்புகிலேன்

# இந்து முகம்



வெளியீடு
புதிய
முகவரி 2018
PUTHIYA MUHAVARY

## திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வின் நிழல்கள்...
















# ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேறுவைத்தந்து தேச நலன் காக்க தேரேறி வருகிறான் நல்லூரான்



முருகப் பெருமான் தன்னுடைய ஆறுமுகக் கோலத்துடன் தேர் மேல் எழுந்தருளி வருகின்றான். சொரூப நிலையில் இருக்கின்ற ஆண்டவன் தடத்த நிலைக்கு வருகின்ற போது முதல் முதல் காட்சிதந்த திருவுருவம் ஆறுமுகசுவாமி. பூரணப் பொருளாக விளங்குகின்ற திருமுருகன் ஆறு முகங்களுடன் அடியார்க்கு அருள்பாலிக்க வருகின்றான்.

ஆறுமுகமும் பன்னிரண்டு தோளும் விளங்குத் தோன்றும் எம் பிரானுடைய தரிசனத்தில் நாம் உள்ளக் கிளுகிளுப்பை அடைகின்றோம். அவன் இன்பம் பாய்ச்சிச் சாவாத நிலை தருகின்றான்.

சிவபிரானுடைய ஐந்து முகமும் உமாதேவியாரின் ஒருமுகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது ஒன்று. இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதேமுகத்தையும் சேர்த்து ஆறுமுகநாதனாக திருஅவதாரம் செய்தான் என்பது மற்றொன்று. நான்கு திசைகளாகிய இடங்கள், மேல் கீழ் என்ற இரண்டு ஆகிய ஆறு இடங்களிலும் எம்பெருமானின் கருணைப்பார்வை செல்கின்றது என்பதை அவனுடைய ஆறுதிருமுகங்களும் நமக்குச் சொல்கின்றன.

மனிதனுடைய உடம்பில் உள்ள மூலாதாரம் , சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு அவதாரங்களிலும் ஆறுமுகப்பெருமான் தனித்தனியே நின்று பாதுகாக்கின்றான். ஆறுமுக தத்துவம் மிகமிகப் பழைமையானது. மிகமிகப் புதுமையன்று எல்லா காலத்துக்கும் உரியது. அதுவே ஆதியானது, அந்தமானது, இன்னொரு வகையாகச் சொல்லப்போனால் ஆதியும் அற்றது அந்தமும் அற்றது. தனது தொன்மைத் திருமுகம் ஆறும் கொண்டான் என்று கந்தபுராணம் காட்டும். “ஆதி யொடும் அந்தம் ஆகிய நலன்கள் ஆறுமுகம் என்று தெளியனே” என்று திருப்புகழில் அருணகிரிநாத சுவாமிகள் பாடுவார்.

வரிசையான ஆறுமுகத்தையும் நாம் கண்ணாலே கண்டுவிட்டால் மட்டும் போதாது. கருத்தாலும் காணவேண்டும். ஆறுமுகத்தைப் பற்றிச் சொல்கின்ற பாடல் எல்லாம் கருத்தாகப் படிக்க வேண்டும். அப்போது பரமானந்த சாகரத்தில் ஆறுமுகங்களையும் காணும் நிலை உண்டாகும்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலே எம்பெருமானுடைய ஆறுதிருமுகங்களும் செய்கின்ற செயல்களை அழகாகச் சொல்கின்றார்.

# ஒளிதரும் முகம் (ஒருமுகம்)

“மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்கப்
பல் கதிர் விரிந்தன்று ஒருமுகம்”

உலகம் எங்கணும் பரந்து கிடக்கின்ற இருளை எல்லாம் அறவே போக்கி ஒளிதருவது ஒருமுகம். சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூன்றும் உலகில் உள்ள இருளைப் போக்கும் மூன்று சுடர். அந்த மூன்று சுடர்களுக்கும் ஒளி தந்து இருளைப் போக்க உதவும் முகம் ஒன்று. இன்னும் சொல்லப் போனால் உயிரின் அறிவு, இச்சை, செயல்களை ஆணவமலம் மறைக்கின்றது. புற இருள் பொருள்களை மறைத்து தன்னைக்காட்டி நிற்கும் ஆயின் ஆணவமல இருள் பொருள்களை மறைத்துத் தன்னையும் காட்டாது நிற்றலின் அவ்விருளிலும் கொடிய இருள் என்பதால் மா இருள் என்றார். ஆணவமல மறைப்பினால் தன்னையும் உயராது மயங்கிக் கிடந்த உயிர் அம்மல மறைப்பு ஒழிந்து தூய நிலை எய்துதல் மறுஇன்றி விளங்குதல் ஆகம். இச்செயலை முருகப்பெருமானின் ஒரு திருமுகத்தின் செயலாக வைத்துப் பாடுகிறார் நக்கீரர்.

## அருளும் முகம் (ஒருமுகம்)

“ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே”

ஆர்வலர் அன்பு மிக்கோர் பக்தர்கள் அவர்கள் தன்னை வாழ்த்துங்கால் அவர்க்கு இனிமையாக ஒழுகி அவர்கள் பால் வைத்த காதலாகவே மகிழ்ந்து வேண்டும் பொருட்களைப் பெற்றுக்கொடுக்கும் ஒருமுகம் அடியார் தமக்கு வேண்டுவன இவை இவை

என கேளாதவிடத்தும் அவர்க்கு வேண்டுவன இவை எனத் தானே அறிந்து ஈர்ந்தருளும் பேரருளாளன் முருகப்பெருமான்.

**வேள்வி காக்கும் முகம் (ஒருமுகம்)**

"மந்திர விதியின் மரபுளி வழாசு
அந்தணர் வேள்வி ஒர்க்கும்மே"

மறை வழி நின்று வேள்விகளைச் செய் கின்றார்கள் அந்தணர்கள் அச்சான்றோர்களுடைய வேள்விகளுக்கு இடையூறு நேராதபடி காப்பது ஒரு திருமுகம் இவர்கள் செய்யும் கன்மவேள்வி, தவவேள்வி, செபவேள்வி, தியானவேள்வி, ஞான வேள்வி என ஐவகைப்படும். இவ் வேள்விகளுக்கு இடையூறுகள் உண்டாகதபடி முருகனே முன்னின்று பாதுகாத்தருள்வார்.

**மெய்ஞானத் திருமுகம் (ஒருமுகம்)**

அறிவே உருவமாக இருப்பவன் முருகன். அவன் ஞான பண்டிதசாமி. அவன் மெய்யடியார் களுக்குத் தோன்றுகின்ற ஐயங்களைப்போக்கி தெளிவிப்பான் அப்படி தெளிவாக்கும் செயலைத் செய்கின்றது ஒருதிருமுகம். சிறப்பாகச் சொன்னால் அத்திருமுகம் நூல்களால் காட்டமுடியாது எஞ்சிய பொருட்களைத் தன் அன்பர்கள் காவல் உறும்படி ஆராய்ந்து உணர்த்தித் திங்கள் போலத் திசை விளக்கும். காட்டாதன எல்லாம் காட்டி சிவம் காட்டி, தாட்டாமரை காட்டி தன்கருணைத்தேன் காட்டி ஆட்கொள்வான் முருகப்பெருமான்.

**வீரத் திருமுகம் (ஒருமுகம்)**

"செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே"

நல்லவர்களுக்கு வரும் துன்பத்தைப் போக்கிடுவான் முருகப்பெருமான். அசுரர்கள் தேவர்களுக்கு அன்று பெருந்துன்பம் விளைவித்தார்கள். அசுரர்கள் நம்மிடையே இன்றும் வாழ்ந்துகொண்டு நல்லவர் களுக்குத் துன்பத்தைத் தந்து கொண்டே இருக்கின்றார் கள். அவர்களை அடியோடு அழிக்கும் திறன் முருகப் பெருமானுக்கு உண்டு இந்த வீரச்செயல்களை ஒருமுகம் செய்கின்றது.

**"இன்பத் திருமுகம்"**

"குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்த தன்றே"

ஆறாவது திருமுகம் இன்பத்தை வழங்குகின்றது. அத்திருமுகம் குறவருடைய இறுமியாகிய வள்ளி யெம்பிராட்டியோடு மகிழ்தலைப் பொருந்திற்று என்பது பாடலின்பொருள். வள்ளி ஆன்மாக்களுடைய பிரதிநிதி முருகப்பெருமானின் இச்சா - சக்தி காமநுகர்ச்சி இல்லாத கடவுள் இவ்வாறு மகிழ்தலைப் பொருந்துதல் உலகில் அன்பு கெழீஇய இல்வாழ்க்கையில் உயிர்கள் அமர்ந்து இன்பம் பெறும் பொருட்டேயாகும்

**ஆறுமுகமான பொருள்**

நாம் காண்கின்ற ஆறு திருமுகங்களையும் இவ்வாறு நக்கீரர் அழகாக வரிசைப்படுத்தி இருக்கிறார். இவற்றை இன்னொரு பாணியில்

"ஏறுமயில் ஏறிவிளையாடும் முகம்..." என்ற திருப்புகழிலே அருணகிரியார் பாடுவார்.

இத்தகு திருமுகங்களோடு தத்துவப் பொருளை விளக்கி நிற்கும் ஆறுமுகங்களோடு அழகியசித்திரத் தேரில் இலட்சோப லட்சம் மக்கள் மத்தியில் பவனி வருகின்ற திருக்காட்சியைப் பார்க்கின்றோம்.

எந்த மயமும் கந்த மயமாகக் காட்சியளிக் கின்றது. நல்லூர் பூலோக கைலாசமாக எமக்கெல்லாம் காட்சியளிக்கின்றது. இந்திர விழாவாக நல்லைத்தேர்த் திருவிழா சிறப்பு பெறுகின்றது.

எல்லாம் வல்ல நல்லைக்கந்தன் நாட்டில் நலமான தீர்வொன்றைத்தந்தருள தேசத்து மக்களின் வாழ்வுக்கு காவலனாக துணையிருக்க வேண்டுமென இந்த நாளில் அனைவரும் பிராத்திப்போமாக

*வர்ணனைக் கலாநிதி*
*மகாகவி காரை எம்.பி.அருளானந்தன் M.A*
*பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை J.P*
*பிரதம நேர்முகவர்ணனையாளர் DAN TV ஓம் TV*
*(முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலி வர்ணனையாளர்)*





# எந்தை வருக ரகுநாயக வருக எனதாருயிர் வருக தேர்மீதே


பேராசிரியர் டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன்
தமிழ்ப்பேராசிரியர், மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம் பெலிகுல்லோயா


"செந்தமிழ் முருகன் நல்லைக்கந்தன் கருணைகூர் முகங்களாறுங் கொண்ட கலியுக வரதன் தேரிலே திருவீதி வலம்வருகின்ற அற்புதத்திருநாள் இன்றாகும். எந்தை வருக ரகுநாயக வருக மைந்த வருக மகனே இனிவருக எங்கண் வருக எனதாருயிர் வருக- புனமேஷம்" என்கிறார் முருகனால் படைக்கப்பட்ட அருணகிரிநாதப்பெருமான். திருவண்ணாமலைக் கோபுரத்தினுச்சியிலே தொழுநோயராய் அங்கமெல்லாம் நொந்து அழுகிய உடம்பினராய் தற்கொலை செய்திறக்க வெனப் பெண்பித்தனாய் திரிந்து அலைந்து உழன்ற அருணகிரிநாதரைத் தமது திருக்கரத்தினாலே தாங்கிய முருகக்கடவுள் நல்லையிலே இன்று தேரேறிப்பவனி வருகின்றான். (முருகா வா! கந்தா வா! கதிர்வேலா வா! கடம்பா வா! கருணைக்கடலே வா!) என்று யாழ்ப்பாணத்துச் சைவக் சீரடியாரும் உலகில் வாழும் இந்து மதத்தவரும் கூப்பிட்டு உரக்கக்கூவி அழைத்த வண்ணம் இருக்கும் திருநாளிலே தேரேறி அருள்புரியத் திருவுளமிரங்கி வருகிறான் திருக்குமரன். விரதமிருந்தது தன் வித்தகனை வரவேற்கின்றனர் சைவத்தமிழ் மங்கையர்கள்.

எம் உயிரைக்காத்தருள் புரியும் நல்லைக் கந்தன் தேரேறி வருகிறான். துன்பந் துடைக்கும் எம் செந்தமிழ்க்குமரன் தேரேறி அருள்புரியும் திருநோக்குடன் வருகிறான் தேவ குஞ்சர மணாளனாய் ஆறுமுக வடிவேலன் அசைந்து அசைந்து ஆடி ஆடி வருகிறான் கிங்கிணி நாத ஓசை மணி சப்திக்கத் தேவசேனாதிபதி வருகின்றான் தேரிலே பார்க்கப் பார்க்க ஒளிரும் வடிவேலுடன் தேரேறி வருகின்றான் முன்னை வினைகளை களைந்திடத் தேரேறி வருகின்றான்

அசுரர் குலம் மாளத் தேரேறி வருகிறான். எமது சிந்தாகுலம் காக்கத் தேரேறி வருகிறான். எப்போதும் பக்கத்திலே இருந்து எம்மையே காத்தருளும் பெருநோக்கோடு தேரேறி வருகின்றான்.

ஒளிப்பிழம்பான முருகன் சூரியப்பிரகாசத் தோடு தேரிலே ஊர்ந்து அருள்செய்ய தேரேறி வருகின்றான் இனவாத இருளை பொசுக்கவென தேரிலேறி வருகின்றான். கொலை உணர்வை அடியோடு வேரறுக்கும் எண்ணத்துடன் தமிழ்க்கடவுள் தேரேறி வருகிறான். உயர்கல்வி பயிலும் தமிழ்மொழி மாணவர்களின் துணையான தெய்வம் எனத் தேரேறி அருள்கின்றான். பல்கலைக் கழகத்தில் அடிவாங்கி அழிகின்ற தமிழினத்தின் துயர்தீர்க்க தேரேறி வருகின்றான். குகையைப்பிழந்து தேவர் சிறைமீட்ட வீரன் தேரேறி வருகிறான். சிறையை உடைத்த கடவுளே! உம்போற் தெய்வம் உலகினிலே வேறுண்டோ? நல்லைக்கந்தனே! உன்செவிகள் தான் செவிடா? உன் பன்னிரு கண்களும் தான் குருடா? முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் தெய்வமே! நீயும் தமிழினத்தை கருவறுக்கும் எண்ணம் கொண்டனையோ? என்ன கவி பாடினாலும் உந்தன் மனம் இரங்கவில்லை! இன்னும் என்ன சோதனையோ? முருகா நீயேன் இரங்காமல் இருக்கின்றாய்? வீதி வீதியாய் முருகா! உந்தன் திருநாமம் இசைத்து திசைத்துப் பாடுகின்றோம். அச் செந்தமிழர் அழிய திருவுளம் கொண்டனையோ? நீ விரும்பும் தமிழ்ப்பாட்டை முழுவதுமாய் முடித்துவிடத்துடிக்கும் கொலைவெறியர் கொட்டமடக்காயோ? இன்னும் ஏன் தாமதம்? ஏன் மௌனம்? ஏன் மௌனம்? எந்தை பிரானே! கந்தசாமியே! வேற்றூர்தான் சென்றனையோ? நீ நல்லையிலே இருக்கின்றாய் என்று தான் நான் நினைத்தேன்! எல்லையறு நம்பொருளே எங்கு நீர் சென்றனையோ? அழுவதற்கும் கண்களிலே நீர் இல்லை குமரா! ஆறுதலுக்கெவருமே உலகிலில்லை உனைத்தவிர தேடுகிறோம் நீதியை! நின்மதியை நீ தந்திடுவாய்! நல்லை நகர் நாயகரே! நாவரண்டு வல்லமையெலாம் இழந்து மடிகின்றோம்! நீ இதனை அறிந்திருந்தும் ஏன்முருகா அடுக்கடுக்காய்த் துயர்தந்து வதைக்கின்றாய்.

சமயம் வரலாறு, சிற்பமும், சித்திரமும், புராணமும் புகழ்ப்பாட்டும் தமிழ்மொழியில் அத்தனையும் இனியும் காப்பாற்ற எம்மால் முடியாது. முருகனே தேரேறும் தெய்வமே நீயே எமக்குதவி. நீடு நிம்மதியைத்தரல் வேண்டும். வேலவனே உன் கைவேல் தான் கறள் பிடித்துப் போனதுவோ! நல்லைநகர் நாயகனே சொல்லுமையா விண்ணப்பம்.

அறக்கடவுளும் நீரே! மறக்கடவுளும் நீரே! அவையெல்லாம் அடியோடு மறந்தனையோ! வேலவனே! உயிர்த்தெழுவாய் வேலவனே! ஊமையனாய் நிற்காதே நாமும் பிழையென்றால் நமையெல்லாம் அழித்திடுவாய்! செந்தமிழ், இன்பத்தமிழ், பைந்தமிழ், தேன்தமிழ், தீந்தமிழ், நறுந்தமிழ், ஞானத்தமிழ் அழியத் திருவுளம் கொண்டாயோ! சொல்லாய் முருகா? எல்லாம் இழந்த கலம் உன்திருவடியில் சமர்ப்பணமாம்! மீண்டும் ஒரு தடவை உன் செவியில் விளம்பிடவோ?

முத்தமிழால் வைதாரையும் அங்குவாழ வைப்போனே உன் பெரும் புகழ் தான் பொய்த்ததுவோ? பதிலென்ன பதிலென்ன? இன்னும் ஏன் எம்மைச் சோதித்துத் தொலைக்கின்றாய்! பேச இனி என்ன இருக்கிறது? தமிழ்க்குமரா? நேசமுடன் உயிர்காக்க வழி சொல்வாய் உன் காலால்!

"இலங்கு தரத் தமிழ் விளங்க வருதிரு
இலஞ்சி மருவிய பெருமானே"

தமிழ் விளங்க வந்துதித்தவனே இன்னுமேன் தாமதம்? செந்தமிழ் நூல் விதித்தோனே தமிழ்மொழி

அழித்தொழியத் திருவுளமோ? எம்மால் முடியாது முருகா! நீயே காத்தருள் புரிய எழுந்தருளி வருவாயப்பா? போதும் உன் சோதனைகள்! தீர்வுதான் வேண்டும் திருக்குமரா? திருவுளம் தான் இரங்காயோ? உன் எல்லா அதிசயமும் அற்புதமும் பொய்தானே? உனை நம்பும் மெய்யடியார் முழுவிசரர் சரிதானோ? நல்லையுறை நாயகனே நல்லவரம் தந்திடுவாய் புலம்புகிறோம்! செய்வதறியாது பிதற்றுகிறோம்! தேற்றாயோ! சைவந்தி நிலைநாட்டல் நுமது கடன் வேலவா? அருணகிரிக்கு அருளிய குருநாதா? ஏன் ஏளனஞ் செய்வோரையும் கொலைவெறியர்களையும் இனப்படுகொலையாளர்களையும் ஏன் நீ இன்னும் எரிக்காமலிருக்கின்றாய் என்றல்லவா ஒவ்வொரு தமிழனையும் உன்னை கேட்கவைத்துள்ளாய்? அருணகிரியும் பொய்யோ! திருப்புகழும் பொய்யோ! உன் தண்ணறியும் திடன் வெறும் பொய்யோ? சொல்லாய் முருகா சுரழபதியே!

இன்று உன் தேரருகிலே தொழுவது போலவே அன்று அருணகிரிநாத சுவாமிகள் பக்தர் குழாம் சூழ திருப்புகழ் பாடிக்கொண்டு முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள திருத்தணி மலையை வலம் வரும்போது துஷ்டர்கள், தெய்வமே இல்லாத கொள்கையுடையவர்கள் திருப்புகழையும் அடியார்களையும் அவமதித்து நிந்தித்து எள்ளிநகையாடினர் மனம்வருந்திய அருணகிரிநாதர் முருகவேளை நினைத்து "சினத்தவர் முடிக்கும்" என்னும் திருப்புகழ் பாடலின் முதல் நான்கு அடிகளையும் பாட எம்பெருமான் அருளால் துஷ்டர்கள் அனைவரும் திடீரென நெருப்பில் எரிந்து சாம்பலானதையும் பின்னர் கருணையே உருவான சுவாமிகள் இப்பாடலின் அடுத்த நான்கடிகளைப் பாடவும் மாண்டவர்கள் மீண்டும் எழுந்தும் அடியார்களானதாகவும் கூறப்படுகிறதே! இவையெல்லாம் முழுப்பச்சைப் புழுகோ? பொய்யோ? கட்டுக்கதை தானோ! நீயே பேச வேண்டும் வேலவா!

பக்தனுக்கருளாது பேசாதிருப்பாயானால் முருகா! நீயென்ன பரம்பொருள் தேவசேனாதியே! உன்மீது எமக்குள்ள அசையாத பக்தி வைராக்கிய உணர்வுடன் கேட்கின்றேன் தொழிற்படு! தொழிற்படு! தொழிற்படு!!!! முருகா! தேரிலிருந்து உனது நடைமுறைத் தொழிற்பாட்டையே நாம் நாடுகிறோம். நீயும் யாப்பியலின் நிறைவைத் தான் நம்பியிருப்பாயோ? ஏமாறும் தமிழினத்தின் ஏழ்மை ஒழித்திடத் தேரேறி வா முருகா தெய்வானை, வள்ளியுடன் தனித்து நீ வந்தாலும் சக்தி கொலுவிருப்பாள் அம்பிகையர் வந்தாலும் அழகுனக்கே! செயல்வீரா செயற்படுக! செயற்படுக! வேகமாய் காலம் கடத்தாத தன்மை எமக்கு வேண்டும். செல்வாயா? முருகா! தேரேறும் கந்தா? சொல்!

---



சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவர் உயிர்க்குஞ் - சினமாக
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் - றறிவாய் யாம்

நினைத்ததுமளிக்கும் மனத்தையுமுடுக்கும்
நிசிக்கருவறுக்கும் பிறவாமல்
நெல்லையும் எரிக்கும் பொருப்பையுமிடிக்கும்
திறைப்புகழுறைக்குந் செயல் தாராய்

தனத்தன தனத்தத் திமித்திமி திமித்தித்
தகுத்தகு தகுத்தத் தன பேரி
தடுட்டுடு டுடுட்டெண் டெனத்துடி முழக்குந்
தனத்துடன் நடக்கும் கொடுதார்



சினத்தையுமுடற்சால் கரித்த மலைமுற்றுக்
சிரித்தெரிகொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தென்
திருத்தணியிருக்கும் பெருமானே"

எனவே இனியும் அருள்புரியத் திருவுளமிரங்காது விடின் நீயும் வாழ்ந்து போதின் முடிவாக திருகோணமலைத் திருப்புகழின் இறுதி அடிகளை உமது திருவடியிலே மீண்டும் அர்ப்பணித்து இனியும் தமிழன் அடிவாங்காத நிலையை அருள வேண்டும் என்று விண்ணப்பம் சொல்கின்றேன். பரீசீலிப்பாயாக!

"நிலைக்கு நான்மறை மகத்தான முகூரர்
திரிக்கோணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குற் வாயினிற் கிளிப்பாடு பூதியில் வருவோர்
நிகழ்த்து மேம்பவ கடற்துறையாகவே
பெடுத்த வேல் கொடு பொடித்துளதா எறி
நினைத்த காரிய மனுக்குலமேபுரி பெருமானே!
இனி உன் தேரிலிருந்து அழித்தற் தொழிலை அழகுறச் செய்தருவாய் முருகா!
அதனையே உலகம் வியப்புடன் எதிர்பார்த்துள்ளது.

**"எனக்கென ஒரு தரம் வா"**



# சிவபுராண மான்மியம்

**நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க**
**இமைப் பொழுது மென் னெஞ்சி னீங்காதான்றாள் வாழ்க**

உலகில் அனைத்துமாய் அதில் ஊடுருவியிருந்து ஆளுகின்றான்

**கோகழி யாண்ட குரு மணிதன் றாள் வாழ்க**
**வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க.**

எது அகத்திலிருக்கின்றதோ அதுவே புறத்திலும் இருக்கின்றது.

**ஏக ன நேகனிறைவனடி வாழ்க**
**வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க**

ஒன்றாயிருப்பவனும் ஒன்றில் பலவாயிருப்பவனும் இறைவன். அதாவது மூலப் பொருளாயிருக்கையில் ஒன்றாகவும் பிரபஞ்ச வடிவில் பலவாகவும் தோற்றமளிக்கிறான். பதி, பசு, பாசம், ஆகவும் (பதி பதார்த்தமாகவும்) அவனை எண்ணுவதும் அவனது திருவடியை தொழுவதும் மனோவேகத்தைக் கட்டுப்படுத்த உதவும்.

**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க**
**புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க**
**கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க**
**சிரங்கு விவா ரோங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க**

பிறப்பு இறப்புகளிடையே வினைகளின் பயனாய் உழலும் சம்சார சாகரத்தை அழிக்க உலகப் பற்றைத் துறந்து இறைபற்றை அதிகரிக்க வேண்டும்.

**ஈசன் அடி போற்றி யெந்தை அடி போற்றி**
**தேசன டி போற்றி சிவன்சே வடி போற்றி**

ஞானம் ஒளிரும் திருவடிகளுக்கு வணக்கம்

**நேயத்தே நின்ற நிமலனடி போற்றி**
**மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி**

பிறப்பு இறப்பு என்னும் மாயையின் விளைவை அகற்றுகின்றவனது திருவடி களுக்கு வணக்கம்

**சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி**
**ஆதார வின்ப மருளுமலை போற்றி**

திகட்டான பேரானந்தத்தை வழங்கி நம்மைக் காப்பவன் சிவன் மலையாள கருணை கொண்டவன்

**சிவனவ னென் சிந்தையு ணின்ற வதனா**
**லவனருளாலே யவன் றாள் வணங்கி**

சிந்தையில் சிவனைத் தொழ சிவனருள் வேண்டும்

**சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை**
**முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்**

வினைகள் தீர்ந்து பேரானந்தம் அளிக்கும் சிவதத்து வங்களை ஓதுவேன்

**கண்ணுதலான்றன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி**
**எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி**

நெற்றிக்கண் என்பது மூன்றாவது கண் இது ஞானக்கண் ஆகும். இது சக்தி மையங்களுள் ஒன்றான ஆஞ்ஞைச் சக்கரத்தினைக் குறிப்புது. ஊனக்கண்ணால் உலகக் காட்சியும் ஞானக் கண்ணால் இறைக்காட்சியும் கிடைக்கும்

**விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொளியா**
**எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்**
**பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்**

பரந்து கிடக்கின்ற அண்டமாதலால் பரம்பொருள் என்கிறோம். அண்டத்தையே ஆங்கிலத்தில் Universe என்கின்றனர். கடந்து நிற்பதால் கடவுள் என்கின்றோம். இலட்சோப லட்சம் தாரகைகள் மூலம் தன்னுடைய இருப்பை வெளிப்படுத்தி நிற்கின்றான். கோடானு கோடி உயிரினங்கள் பொருந்திக் கிடக்கின்ற உலகில் ஒரு சீர்த்தன்மை காணப்படும். எல்லாமே நியதிக்கு உட்பட்டதாய் இருக்கின்றது. வினையின் விளைவாய் உடலெடுத்து ஐம் பொறிகளின் கட்டுப்பாட்டில் அகப்பட்டுக் கிடக்கின்ற நான் அகிலத்து நாயகனை எப்படி அறிந்து போற்றுவது.

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்சுைரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாஅ**
**நின்ற வித்தாவர சங்கமத்து ளெல்லாப் பிறப்பும்**
**பிறந்திளைததேன் எம்பெருமான்**

ஆத்மாவிற்கு பரிணாமத்தில் உள்ள சலிப்பு

**மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்**
**உய்ய வென்னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற**
**மெய்யா விமலா விடைப்பாக வேதங்க ளையா**
**எனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே**

மெய்ப்பொருளினைச் சேரலே வீடுபேறு ஆகும். உயர்ந்தும் தாழ்ந்தும், விரிந்தும் சூட்சுமப் பொருளாக நின்றாய். சாசுவதமானதால் மெய்யன் தனக்கு புறம்பாகப் பொருள் இன்மையால் விமலன். கண்ணுக்குப் புலப்படாத காரணத்தால் நுண்ணியன்.

**வெய்யாய் தணியா யியமானனாம் விமலா**
**பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி**

வெப்பமாய் குளிர்ச்சியாய் உயிர்த்தத்துவமாய் உள்ள முதல்வனே என்னிடமுள்ள அழியக் கூடியவை களை எல்லாம் அகற்றுவதற்கு அருள்.

**மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே**
**யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே**

ஆன்மாவாகி ஒளிர்கின்ற ஞானச்சுடரே (பதிபதார்த்தம்)

**அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே**

எது நிலையென்று கருதுகிறோமோ அது நிலையல்ல எது நமது என்று கருதுகின்றோமோ அது நமதல்ல இதனை உணர்வது ஞானம். உணரத்தவறுவது அஞ்ஞானம். அவதானிப்புக்களால் அறியும் ஞானம் விஞ்ஞானம். இறையியலால் உணரும் ஞானம் மெய்ஞானம்.

**ஆக்கமளவிறுதி யில்லாய் அனைத்துலகு**
**மாக்குவாய் காப்பாயழிப்பாய் அருள் தருவாய்**

தோற்றமும் அளவும் முடிவில்லாத நீ உலகங்களை உண்டுபண்ணுவாய். நிலைத்திருக்கச் செய்வாய். அழித்திடுவாய். இடையில் உயிர்களை உன்மய மாக்கிடுவாய் (முத்தி)

**போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்**
பிறப்பென்னும் விலங்கொடித்து: உனது சேவைக் காளாக்கிக் கொண்டது உந்தன் கருணை.

**நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே**
**மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே**

ஆத்ம சாதனையின் உச்ச நிலையில் மனதற்றுப் போகும் மனதால் பார்க்கிறபோது இறைவன் புறம் பொருள்களில் மறைந்து காணப்படுவான் மனதைத் தொலைத்துவிட்டால் அவன் உள்ளபடி ஒளிர்வான்.

**கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்**
**சிறந்தடியார் சிந்தனையுள் தேனூ றிநின்று**

இறையனுபவம் தேனிலும் இனிது

**பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா**
**னிறங்க ளோரைந்துடையாய் விண்ணோர்களேத்த**

பிறவித் துன்மை நீக்குபவன்

**மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினை**
**யேன் றன்னை மறைந்திட மூடிய மாயவிருளை**

ஓயாது மாறிக் கொண்டிருக்கும் இப் பிரபஞ்சம் ஓர் மாயை

**அறம்பாவமென்னு மருங்கயிற்றாற் கட்டிப்**
**புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி**

ஆத்மாவினை இறுகப் பிணைந்திருக்கிறது நல்வினை தீவினை என்பன

**மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை**
**மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய**

நாம் பெறும் ஆனந்தமும் அறிவும் முழுமையான தல்ல, நிலையானதுமல்ல

**விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்**
**கலந்து வன்பாகிக் கசிந்துள்ளுருகு**
**நலந்தானிலாத சிறியோர்க்கு நல்கி**
**நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி**

இறைவனை இயற்கையில் காண, இயற்கையை காண நம்மால் முடியும்

**நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே**

தூலதேகத்தில் இருந்து சூக்கும தேகத்தில் உன்னடியில் வந்துற்றபோது அருளியவனே

**மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே**
**தேசனே தேனா ரமுதே சிவபுரனே**

சிவனொளி நிரந்தரமானது

**பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே**
**நேச வருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெட**

பாசப்பிணைப்பினை நீக்கு

**பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே**
**யாரா வமுதே யளவிலாப் பெருமானே**

ஆன்மா குறைவுடையது. இறைவன் நிறைவுடைய வன்

**ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே**
**நீராயுருக்கி யென்னாருயிராய் நின்றானே**

(சீவன் முத்தர் நிலை)

அறியாத உள்ளங்களில் ஒளியாய் மறைந்திருக்கும் நீ என்னுள் அரிய உயிராய் நிலைத்துள்ளாய்

**இன்பமுந் துன்பமுமில்லானே யுள்ளானே**
**அன்பருக்கன்பனே யாவையும் ஆய் அல்லையும் ஆம்**

நீ பரம்பொருள் என்பதால் இன்பமும் துன்பமும் உனக்கில்லை. உலக உயிர்கள் அனைத்திலும் உள்ளமையால் அவற்றின் இன்ப துன்பங்கள் உன்னுடையதாகும். (Singularity of Consciousness)

**சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே**
**யாதியனே யந்த நடுவாகி யல்லானே**

ஆத்மாவினிடத்தே சுடர்விடும் சோதியும் நீ, அதற்கு இயலாத அருளும் நீ பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு ஆதிமூலம் நீ இறுதியில் அது உன்னிடத்தில்தான் ஒடுங்குகின்றது. இடைநிலையில் அது உன்னில் தான் இயங்குகிறது. எந்த மாற்றமும் உன்னைப் பாதிப்பதில்லை.

(Big Bang, Expansion of the universe and Big crunch)

**ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே**
**கூர்த்த மெஞ் ஞானத்தாற் கொண்டுணர் வார் தங்கருத்தின்**

மிக நுட்ப அறிவுடையோரே உன்னை உள்ளவாறு உணர்வர்

**நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே**

புறக்கண்ணால் கான - முடியாத உன்னை மனக் கண்ணால் உணரலாம்

**போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே**

ஒன்றுடனும் சேர்க்கை உனக்கில்லை

**காக்குமெங் காவலனே காண்பு அரிய பேர் ஒளியே**

என்னுள்மனச்சாட்சியாய் இருக்கின்றாய்

**ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக்காய் நின்ற**

உலகத்துக்கும் உயிரினங்களுக்கும் முதற் காரண மாய் இருப்பதால் அத்தன் (அப்பன்) படைப்பிலும் சிறிதும் சம்பந்தப்படாமல் இருப்பது "மிக்காய்" எனப்படுகிறான்.

**தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர் வாய்**

தன்னைத்தானே விளங்கிக் கொண்டிருக்கிற சாசுவதமான ஒளிப்பிளம்பே! நீ சொல்லில் விவரிக்க முடியாத பேருணர்வுப் பரம்பொருள்.

**மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்**

தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கும் இவ்வுலகில் நீ எடுக்கின்ற அத்தனை வடிவங்களினூடும் அவற்றின் அறிவாய் இலங்குகின்றாய்.

**தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு**
**ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே**

இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தவன் மக்களின் நெஞ்சங்களிலும் வீற்றிருக்கிறான். தன்னுள் இருப்ப வனை அறிந்தவர்கள் அமிர்த சொரூபமாகிறார்கள். தெளிந்த நல்லுணர்வு சுத்த சைதன்யம் அல்லது பிரக்ஞானம் (pure consciousness) எனப்படும்

**வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப**
**வாற்றே னெம்மையா வரனேயோ வென்றென்று**
**போற்றிப்புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்**

நான் என்பது உடலல்ல, ஆத்மா என்பதை உணர வேண்டும். ஆத்ம உணர்வை வளர்த்தால் மெய்யுடலைப் பெறுவோம்.

**மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே**
**கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே.**

உடலிலுள்ள ஐம்பொறிகளுக்கு மெஞ்ஞானத்தைத் திரிவுபடுத்தும் தன்மை உண்டு. இந்த உடலின் அமைப்பைக் கலைப்பதன் மூலம் என் உள்ளத்தினுள் நீ சிவபோதத்தை வளர்க்கிறாய்.

**நள்ளிருளினட்டம் பயின்றாடு நாதனே**

தொடர்ச்சியான அதிர்வுகள் மூலம் படைப்புடன் படைத்தவற்றை இயக்குவதோடு காத்தலையும் செய்கின்றான்.


**தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டனே**

அகில அண்டங்களையும் ஆட்டுவிக்கிறவனே

**அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று**

இறைவன் கடலாயிருக்கிறான் பிறவித் துயரில் ஓலமிடுகிற நாம் நதியாயிருக்கின்றோம்.

**சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்**
**சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தி னுள்ளர் சிவனடிக்கீழ்ப்**
**பல்லோரு மேத்தப் பணிந்து.**



எண்ணத்திற்கும், வாக்கிற்கும் எட்டாதவன் பெரியவர்கள் தங்கள் உணர்வுகளுக்கு வார்த்தை வடிவம் கொடுத்தார்கள். அச் சொல்லில் மறைந்திருக்கும் பொருளுணர வேண்டும். உணர்ந்து ஆராதிக்கச் சிறந்தவை உணர்ச்சிப் பூக்கள் இறையியலும் இயற்பியலும் ஒன்றிக்கும் தன்மை சிவபுராணத்தில் உணர்த்தப்பட்டுள்ளது. நாயேன் நீயேன் என ஆன்மா பதி பதார்த்தமாகும் நிலையினைச் சிவபுராணம் மணிவாசக அடிகள் மூலம் எடுத்தியம்புகிறது. இதுவே சிவபுராணத்தின் மாண்பு ஆகும்.

**திருச்சிற்றம்பலம்**

**மருத்துவர் சி. யமுனாநந்தா**

# ஆலயமும் வழிபாடும்

*அமரர் மு.வ. தம்பையா இராஜசிங்கம்*
*மலேசியா*

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது பெரியவர்கள் வாக்கு. மனம் இழுத்த பக்கமெல்லாம் போய்விடக் கூடாது அதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். அதற்கு வழிபாடு அவசியம். நமது முன்னோர்கள் காட்டிய அறவழித்தன்மை மிக ஆழ மான பக்தியுணர்வையூட்டவல்ல ஒரு தனித்தன்மை வாய்ந்தது. ஆலயம் என்ற சொல் ஆ என்கிற ஆன்மா ஒன்று சேருகிற, லயம், இடம், ஆலயம் என்பதாகும். அத்துடன் ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் என்பதாகவும் கொள்ளலாம். இவ்வரிய தத்துவத்தை உள்ளடக்கிய ஒன்றால் நமது வழிபாடு எவ்வகைப் பட்டதாக இருக்க முடியும் என்பதை நமது முனிவர் களும், மகான்களும் தேர்ந்த தெளிந்த ஞானப் பார்வையின் மூலம் சாதாரண மக்களும் அதைப்பெற வேண்டும் என்று வகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள் திருக்கோயில் இல்லாத திருவில் ஊர் என அப்பர் சுவாமிகள் திருவாக்கு. ஒரு நாட்டுக்கு அல்லது நகருக்குத் திருக்கோயில் அமைவது மிக மிக முக்கியம் என்பதை அன்றே முன்னவர்கள் வகுத்துள்ளார்கள்.

நமது வழிபாடு மிகத் தொன்மையானது. நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் அறவொழுக் கத்தின் கண்நின்று போதித்த உண்மைத்தத்துவங்கள் மனித வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்பவையாகும். எங்கும் பரவியிருக்கும் தெய்வீகத்தைக் கோயில் என்ற உருவகம் பெற்று ஓர் இடத்தில் கண்டு வழிபாடு செய்வதால் நற்பயனை மனிதன் அடைகின்றான் என்பதும் ஒழுங்கும் கட்டுப்பாடும் அங்கே உயர்வதா கவும், மனிதனின் தேவநிலை பெருகுவதாகவும் கொள்ளமுடியும். மனித சரீரத்தை மையமாகக் கொண்டு திருக்கோயில்கள் அமைந்திருப்பதை நாம் காண் கின்றோம். இவை மிக அரிய தத்துவங்களைக் கொண்டதாக கோபுரம், கொடிமரம், கருவறை, பிரகாரங்கள், மண்டபங்கள் இடம்பெற்றிருக்கின்றன. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்பது திருமூலர் வாக்கு.

சிரசைக் கற்பக் கிரகமாகக் கொண்டு ஆலயம் அமைகின்றது. திருவடியே இராஜகோபுரம். சிரத்தின் மேல் ஆயிரம் இதழ்களைக் கொண்டதாக உள்ள தாமரைப்பூ வடிவத்தில் விமானமும், கலசங்களும் வைக்கப்பெறுகின்றன. பரவெளியில் தாமரைக்கு மொட்டுப்போன்றதை உணர்த்தும் கலசம் இடம் பெறுகின்றது. இவை மேல் நோக்கிக் கூர்மையாகக் காணப்படுவதை நாம் பார்க்கின்றோம். மேலும் வளர்ந்து கொண்டே இருக்க ஓர் உருவகமாக அமைகிறது. மானிட வாழ்வில் உயர்ந்த வாழ்வே நிலையாக இருக்க இம்மாதிரி அமைப்புக்கள் சிறந்த வழிகாட்டிகளாக நமக்குப் புலப்படுத்தப்படுகின்றது. தமக்கென வாழ்ந்த மனித சமுதாய மேம்பாட்டிற்கு தக்கபடி வாழவைக்கும் முறை திருக்கோயிலின் தத்துவமாகும்.

எல்லோருக்கும் ஒரே மாதிரித்தான் மழை பொழிகின்றது. அதே போலத்தான் தெய்வீகம் என்பது எல்லோரிடத்திலும் இருக்கின்றது. அதை ஆன்மா வோடு சேர்க்கின்ற நாம் பின் தங்கிவிட்டால் பயனை எப்படிப்பெற முடியும்? ஆகவே தெய்வம் நம்மிடத்தில் இருந்தாலும், நாம் தெய்வத்திடம் இருக்கிறோமா என்பதே கேள்வி தெய்வ நெறியில் தம்மை ஈடுபடுத்திய மனித மனம், உடலையும், உள்ளத்தையும், அங்கே ஒருநிலைப்படுத்தி வழிபாடு எனும் திருப்பத்தை பெற்றவனாகிறான். தீய எண்ணங்கள் மறைந்து தூய்மை வெளிப்படுகிறது. பேராசையின் நிமித்தம்

பிதற்றிய அவனது போக்கு மாயையின் சிருஷ்டி அக்கணமே மாறி அறவழியில் ஆன்ம நேயத்தன்மை மிக ஆழமாகப் பதியவைக்கிறது.

நமது வணக்க முறைகள் மகான்களால் முறையாக வகுக்கப் பெற்றவை. (இவை நேற்றுத் தோற்றுவிக்கப்பட்டவை அல்ல). இந்து ஆலயங்களில் வழிபாடு நடைபெறும் காலங்களில் இசை முழக்கங்கள் இருப்பதைப் பார்க்கின்றோம். ஆங்கே "சப்த" பேரிகைகள் முழங்க வேண்டும் என்று கண்டார்கள். சப்தம் என்பது ஏழு இசை என்பதாகும். ஆகவே சுந்தரப் பெருமான் ஏழிசையாய் இசைப் பயனாய் இறைவன் உள்ளார் என்றார். ஏழிசையாவன "சுரலொலி" சங்கொலி, பேரிகை, நாதஸ்வரம், தவில் ,கண்டாமணியோசை, புல்லாங்குழலோசை போன்ற வற்றை உருவாக்கப்படுத்தி இயங்கச் செய்தார்கள்.

இதன் உட்கருத்து மகான்கள் தவ வலிமையால் தமது சரீரத்தில் உள்ள பிரம்மேந்திரத்தில் குண்டலினி சக்தி புகும் காலத்தில் ஒரே நேரத்தில் ஞானியானவர் இத்தனை சத்தத்தையும் கேட்டு மனச்சாந்தியும், மகிழ்ச்சியும் கொண்ட வகையில் இம்மாதிரி முறையை சாதாரண மக்களும் கேட்டு மனச்சாந்தி கொள்ள வேண்டுமென்று நினைத்துத் தமது நாதசஞ்சாரத்தைத் திருக்கோயில்களின் வாயிலாக மனிதன் தெரிந்து கொள்ள வழி செய்தார்கள். திருக்கோயில்களுக்குச் செல்வது ஏதோ ஒரு விழாவிற்குப் போவது போல் இருக்கக் கூடாது. ஆலய வழிபாட்டில் தூய்மையான பக்தி இருக்கக் வேண்டும். நாம் வணங்கும் தெய்வத்தின் முன் "கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி, வெதும்பி, உள்ளம் பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி " என்று மணிவாசகப்பெருமான் கூறுவது போல் ஆடாத அசையாது வீட்டு விவகாரங்களைப் பேசாது நின்று வணங்கி அவனது திருவருளைப் பெற முயல வேண்டும். அஃதொன்றே தெய்வீகத்தை மனிதன் அடையும் முயற்சிக்கு முறையான போக்குமாகும்.

கருணை என்பது அணுத்துணையுமில்லாதவர் வெறும் பூசையிலும் ஜெபத்தினாலும் இறைவனுடைய கருணையைப் பெறமாட்டார் கருணையினால் கடவுளுடைய கருணையைப் பெறலாம்.

"எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணியிரங்க நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே
எவ்வுயிருந் தம் உயிர் போல் எண்ணுந்தபோதனர்கள்
செவ்வறிவை நாடி மிகச் சிந்தை வைப்பதெந்நாளோ
(தாயுமானவர்)

ஆலயங்கள் உயர்ந்த இலட்சிய சின்னங் களாகும். அதைப் போற்றி வளர்ப்பதில் மனிதன் காட்டும் தூய்மை ஒரு சிறந்த நம்பிக்கையின் மெய்ப்பொருளாகக் கொள்ள முடியும். நியதி தவறாமல் நடப்பதும், நெறிவழியில் நிற்பதும் சமுதாய மேம்பாட்டைக் குறிக்கும்.

1. "எந்த நாள் கருணைக்குரித் தாகு நாள் எனவும் என்னிதயத் என்னை வாட்டுதே" என்று இனிமையாகக் கூறுகின்றார்
தவராஜசீலராகிய தாயுமாவர்.

2. கடவுளுக்கு கருணையே திருமுகங்கள் அவருடைய திருமுகங்களில் குற்றாலம் அருவியிலும் மிகுதியாகக் கருணையருவி பொழிகின்றது.

"முகம் பொழி கருணை போற்றி"
"கருணை கூர் முகங்களாறும்"
"கருணை பொழி கமலமுகமாறும்"
"உனது முக கருணை மலர் ஓராறும்"

3. காகங்கள் கோடி கூடி நின்றாலும் ஒரு கல்லிற்கு முன் நிற்காது. அதுபோல் கோடி வினை கூடிநிற்கினும், கடவுளுடைய கருணை வெள்ளத்தில் ஒரு துளிபடுமாயின் கோடிவினையும் பறந்துபோம்.

காகமானது கோடி கூடி நின்றாலும் ஒரு
கல்லிற்கு முன் எதிர் நிற்குமோ
கர்மமானது கோடிமுன்னே செய்தாலும் நின்
கருணைப் பிரவாக அருளைத்
தாகமாய் நாடினரை பாதிக்க வல்லதோ?

இறைவனுடைய கருணை கடலினும் பெரிது. சமானமில்லாதது அது "தனிப் பெருங்கருணை" "கேழில் பரங்கருணை"

நம்மினும் தாழ்ந்த உயிர்கள் படுகின்ற துன்பத்தைக் கண்டு நாம் உள்ளம் இரங்கிக் கருணை புரிவோமானால் நம்மிலும் இறைவர் கருணை புரிவார். நாம் யார் மாட்டுங் கருணை காட்டாது கல்லைப் போல் இருப்போமாயின் கடவுட் கருணை நம்மீது எப்படி எய்தும்? கடவுள் கருணை மீது குற்றமில்லை. அதனைப் பெறுவதற்கு நாம் ஆயத்தமாக இல்லை. அதற்குரிய பண்பு பெறவில்லை.

அதனால் நாம் கருணையுடையவராகத் திகழவேண்டும். மன்னுயிர்களைத் தன்னுயிர் போல் எண்ணி இரங்க வேண்டும்.

மனத்தாலும் வாயாலும் அணுக முடியாத பரஞ்சோதியாகிய கடவுளுக்கும் “சோதி வெள்ளத் துள்ளே எழுவதோருரு” என்றும், “நெஞ்சினால் நிலையான யௌவனமான நீள் கடல் வண்ணனே” என்று சொல்லுகின்றபடி அடியார்கள் தொழுவதற் கென்றே பாங்கான திவ்விய மங்கள விக்கிரகம் அமைக்கும் பெருமை உண்டாயிற்று.

திறமைசாலிகளான சிற்பிகளால் குற்றமற்ற தாகவும், கவர்சிகரமாகவும், எழில் மிக்கதாகவும், படைக்கப்பட்ட விம்பங்களில் வேதமந்திரங்களாலும் மற்றுமுள்ள பக்திப் பாடல்களாலும் வேண்டப்பட்ட பரந்தாமன் நிரந்தரமாக ஸாந்-நித்தியம் செய்தருளி இம் மண்ணுலகை வாழ்வித் தருளும் வகையே “அர்ச்சாமூர்த்தி” என்று வழங்கப்படுவதாகும்.

எல்லாம் வல்ல இறைவன் முதற் சிப்பியாவான் என்பது மனுஸ்மிருதி, அதனால் உலக சிற்பியான அவ்விறைவனை வேதம் “விஸ்வகர்மா” என்று அழைக்கிளன்றது.

இறைவனுடைய விசித்திரச் சிருஸ்ரியில் தோன்றிய நாமும் அவனது விருஸ்ரியாகிய கல், மண், மரம், உலோகம் முதலியவற்றால் அவனது திருவுருவங் களையும், மற்றும் கோயில்களையும் கோபுரங் களையும், மண்டபங்களையும் தோற்றுவித்தது அவனுடைய இன் அருளைப் பெற மனிதன் முயற்சித்தான். இறைவன் மனிதனைப் படைத்தான். மனிதனும் இறைவனைச் சிலைவடிவில் படைத்தான்.

# விரதங்கள்



*அமரர் மு.வ. தம்பையா இராஜசிங்கம்*
*மலேசியா*

## ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி விரதம்



மும்மூர்த்திகளில் ஒருவரான பிரமாவினால் தோற்றுவிக்கப்பட்ட “சிந்தூரனை” விநாயகர் சங்காரம் செய்த தினம் ஆவணி மாதம் பூர்வபட்சம் சதுர்த்தியபகும். இத்தினத்தில் சிவ பார்வதி உட்பட தேவர்கள் மானிடர்கள் அனைவரும் வழிபட்டு அவரைப் பூசித்தமையினால் இவ்வுலகில் வாழும் இந்து சமயத்தவர்கள் அனைவரும் ஆண்டு தோறும் இத்தினத்தை விநாயகர் சதுர்த்தி தினமாக அனுஷ்டித்து வருகின்றனர்.

இதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு புராணக் கதைகள் உள்ளன. கஜமுகன் என்ற அசுரன் தவம் செய்து சிவபெருமானிடம் எண்ணற்ற வரங்களைப் பெற்றிருந்தான் அரிய வரங்களைப் பெற்றதால் ஆணவம் அவனது தலைக்கு ஏறியது. தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். தேவர்களை தனக்கு முன்னால் ஆயிரத்து எட்டு தோப்புக்கரணம் மூன்று வேளையும் போடச் சொன்னான். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள் சிவபெருமான் கஜமுகனை அழிப்பதற்காக தன் மகனான விநாயகனை அனுப்பினார். கஜமுகனிற்கும் விநாயகனிற்கும் நடந்த போரில் கஜமுகன் படை அழிந்தது. ஆனால் அவன் அழியவில்லை. காரணம் அவன் எந்த ஆயுதத்தாலும் அழியாவரம் பெற்றிருந்தான். அதை உணர்ந்த விநாயகர் தன் கொம்பு என்னும் மருப்பை ஒடித்து ஏவினார். கஜமுகனின் அசுர உருவம் அழிந்து பெருச்சாளியாக வந்து விநாயகரின் பாதத்தில் சரண் அடைந்தான். விநாயகர் அதைத் தனது வாகனமாக ஆக்கிக் கொண்டார். பிரம்மாவின் மகனான தட்சன் சிவபெருமானை நோக்கி உமையம்மை தனக்கு மகளாகப்பிறக்க வேண்டும் என்று கடும் தவம் செய்ததன் விளைவாக பார்வதி தாட்சாயினி என்ற பெயரில் தட்சனுக்கு மகளாகப் பிறந்தாள். அதன் பின் தட்சன் பெரிய யாகம் ஒன்று செய்தான். அந்த யாகத்திற்கு தேவர்கள் பலரும் வந்தனர். மருமகனான சிவனையும், தன் மகளையும் அழைக்கவில்லை. ஆனாலும் தாட்சாயினி போகத் தீர்மானித்தாள். சிவன் தடுத்தும் தாட்சாயினி பிடிவாதமாய் யாகத்திற்கு போனாள். உரிய மரியாதை கிட்டப்பெறாமல் அவமானப்பட்டு யாகசாலை சுடுகாடாக மாறட்டும் என்று சபித்து விட்டு திரும்பினாள். இந்த நிகழ்வினால் சிவன் தட்சன் மேல் கோபம் கொண்டு வீரபத்திரரை தட்சன் யாகத்தை அழிக்க ஆணையிட்டார். யாகம் நடக்கும் இடத்திற்குச் சென்ற வீரபத்திரன் தட்சனின் ஆட்களையும், தட்சனையும் வெட்டி வீழ்த்தினான். இருப்பினும் தந்தையின் மேல்கொண்ட பாசத்தினால் உமையின் விருப்பத்திற்கு இணங்க வெட்டப்பட்ட தட்சனின் தலைக்குப் பதிலாக ஆட்டுத்தலையைப் பொருத்தி உயிர் கொடுத்தார். தட்சன் கொடுத்த இந்த உயிர் இருக்கக் கூடாது என்று யாகக்கினியில் தன் தேகத்தை எரித்து தன்னை மாய்த்துக் கொண்டாள் தட்சாயினி. அதன் பிறகு பர்வதராஜனுக்கு மகளாகப் பார்வதியாகப் பிறந்த தாட்சாயினி சிவபெருமானை அடைய ஆவணி மாதத்தில் வரும் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து சிவனையே கணவனாக அடைந்தாள்.

# முருகனும் தைப்பூசமும்

தைப்பூசம் எல்லா சிவன் கோயில்களிலும் முருகன் கோயில்களிலும் கொண்டாடப்படுகிறது. தைப்பூசம் உண்மையில் சிவனுக்குரிய திருநாள் ஆகும். பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாதரும் சிவபெருமான் நடனமாடுவதை நேரில் காண வேண்டும் என்பதை விரும்பி பன்னெடும் காலம் தவமிருந்தனர். அவர்கள் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவர்கள் முன்தோன்றி "நாம் தில்லை மன்றில் நடனமாடத் திருவுளம் கொண்டுள்ளோம். அங்கே வந்து காண்க" எனத் திருவாய் மலர்ந் தருளினார். முனிவர்கள் இருவரும் தில்லைக்குச் சென்று காத்துக் கிடந்தனர். திடீரென தில்லை மன்றில் பெருமான் தோன்றினார் நடராசப் பெருமா னாக நின்று ஆனந்த தாண்டவம் புரியலானார். அவர் முதன் முதலில் தில்லையில் நடனமாடிய நாள் தைப்பூச நன்நாள் ஆகும். முனிவர்கள் இருவரும் கண்டு பேருவகை எய்தினர். இதிலிருந்து சிவன் கோயில்கள் அனைத்தும் ஆனந்த தாண்டவ நாளாக தைப்பூசம் கொண்டாடப்பட்டு வருகிறது.

முருகனுக்கும் சிவனுக்கும் பேதமில்லை "நாமே ஒரு விளையாட்டுக் காரணமாக முருகனா னோம்" எனச் சிவபெருமான் கூறுவதாக கந்த புராண ஆசிரியர் பாடுகிறார். முருகனுக்கு அறுமுகச் சிவன் என்ற ஒரு பெயரும் உண்டு. முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் அடியவர்கள் பெருட்டு எத்தனையோ வடிவம் கொள்கின்றான். அவ்வடிவங்களில் ஒன்றே முருக வடிவமாகும். சிவபெருமானுக்கு இருபத் தைந்து மகேஸ்வர மூர்த்தங்கள் உண்டு எனச் சாத்திரம் கூறும். அவை அனாதி வடிவங்கள் எனவும் அது சொல்லும் அனாதி வடிவங்கள் என்றால் இன்ன காலத்தில் தோன்றியவை என்றில்லாமல் என்றும் இருக்கின்ற வடிவங்கள் என்று பொருள். இந்த இருபத்தைந்து மகேஸ்வர மூர்த்தங்களுள் சோமாஸ் கந்த மூர்த்தமும் ஒன்றாகும். அம் மூர்த்தத்தில் சிவபெருமானே அப்பனாகவும், பிள்ளையாகவும், அம்மையாகவும் வடிவம் கொள்கின்றான். இவ் வடிவத்தின் நடுவில் இருக்கின்ற பிள்ளை கந்தன் என அழைக்கப்படும். அதுவே முருகனாகும். எனவே சிவபெருமானே முருகனாக விளங்குகிறான் என்பது தெளிவு.

முருக வடிவம் அநாதி மகேஸ்வர வடிவத்தில் இடங்கொண்டு இருப்பதால் சூரபதும வதத்திற்கா கவும் பின்னொரு காலத்தில் இதே வடிவம் ஆறுமுகம் கொண்டு தோன்றியதென அறிதல் வேண்டும். பெரியோர்களில் சிலர் முருகப்பெருமானே ஞானசம்பந்தராக அவதாரம் செய்தார் எனப் பாடியுள்ளனர். சிவபெருமான் பிறப்பில்லாதவன். ஆகவே அவன் வடிவத்தில் ஒன்றாகிய முருக வடிவம் பிறப்பற்றதேயாகும். உருத்திர லோகத்தில் சுப்பிரமணிய பதம்பெற்ற ஆன்மாக்கள் உண்டு. இவர்களைச் சுப்பிரமணியர்கள் என்றே ஆகமம் கூறும். அத்தகையோரில் ஒருவரே ஞானசம்பந்தராக அவதாரம் செய்தார் என்னும் கருத்தை உட்கொண்டு பெரியோர்கள் உபசாரமாக அவதாரத்தை முருகன் மீது ஏற்றி அவனே சம்பந்தராக வந்தார் எனப் பாடியுள்ளார். சிவபெருமான் முருகனாக விளங்கும் நிலையில் சுப்பிரமணியன் என்று அழைக்கப் பட்டாலும் சுப்பிரமணியாதம் பெற்ற ஆன்மாக் களுக்கும் அவனுக்கு வேறுபாடு தெரிவதற்காக இறைவனாகிய சுப்பிரமணியனைப் பர சுப்பிர மணியன் என்றும், அபர சுப்பிரமணியன் என்றும் கொள்ள வேண்டும். சிவபெருமானாகிய முருகன் பிறப்பிற்குட்படாதவன் என்பதை அருணகிரிநாதர் "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என இனிதெடுத்து கூறினார். ஆகவே முருகனும் சிவனும் ஒன்றே என்பதில் சைவர்களாகிய நாம் எந்த விதத்திலும் சந்தேகம் கொள்ளக்கூடாது.

முருகனுக்கும் சிவனுக்கும் வேறுபாடில்லை என்பதை உணர்த்துவதற்காகவே சிவாலயங்களில் கொண்டாடப்படும் எல்லாத் திருநாளையும் சுப்பிர மணிய ஆலயங்களில் கொண்டாடுகின்றோம். இதனாலேயே சிவனுக்குரிய திருநாளாகிய தைப பூசம் முருகனுக்கும் உரிய திருநாளாயிற்று. தை மாதத்தில் பௌர்ணமியோடு கூடிவருகின்ற பூச நட்சத்திரத்தில் தைப்பூசம் கொண்டாடப்படும். உயிர்களுக்கு அறிவுத் தெளிவை ஏற்படுத்துவதில் பௌர்ணமியும் பூச நட்சத்திரத்திரமும் பெருந் துணையாக நிற்கும் ஞானவேல் பெற்ற நன்னாளா தலால் தைப்பூசத்தை கொண்டாடு வோருக்கு ஞானம் பெருகும் என்பதைக் கூற வேண்டியதில்லை. முருகப்பெருமான் ஞானச் செல்வன். உயிர்களுக்கு ஞானத்தை வழங்குவதற்காகவே அவன் ஞான பண்டிதனாக விளங்குகின்றான். சுவாமி மலையில் ஞானத்தை உபதேசிப்பதற்காகவே அவன் குரு மூர்த்தம் கொண்டிருக்கின்றான். உலகில் செம்மையான இல்லறவாழ்வை நாம் நடத்தி வந்தால் அது நாளடைவில் ஞான நாட்டத்தை நமக்கு உண்டாக்கும். இதனாலேயே முருகன் நாம் பக்குவம் பெறும் வரை நமக்கு இம்சைச் செல்வங்களையும் வழங்குகின்றான். வறுமை, நோய், கவலை முதலிய வற்றை நீக்கிச் செல்வம், ஆயுள், ஆரோக்கியம், மனஅமைதி ஆகியவற்றை முருகன் நமக்குத் தருகிறான். முருகனை வழிபடுவோர் பெறும் பயனை கந்தர் சஷ்டி ஆசிரியர் கவசம் படிப்பதன் பயனாகக் கொண்டு பாடல் செய்துள்ளார். அப் பாடல் மிக எளிமையாக இருப்பதால் யாவரும் விளங்கிக் கொள்ளக் கூடும் என எண்ணி அதனை இங்கே எடுத்துக் காட்டுகிறேன்.

"துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சில்

பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித் தோங்கும்

நிஷ்டையுங் கை கூடும் நிமலர் அருள் கந்தர்

சஷ்டி சவசந்தனை"

தைப்பூசத் திருநாள் முருகனை வேண்டி நாம் குறித்த பயனை அடையலாம். சர்க்கரைக் காவடி, பாற்காவடி எடுத்து மலைமீதேறிக் காணிக்கை செலுத்தி அவன் அருளைப்பெறலாம்.

அறிவுத்தெளிவை உண்டாக்கும் பௌர்ணமியோடு கூடிய பூசநட்சத்திரத்தில் முருகப்பெருமானின் திரு வுருவத்தை காண்பது ஞானம் பெறுவதற்கு ஏதுவாகும். "தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்" என்பது ஞானசம்பந்தர் வாக்கு.

"மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்

அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்

கண்ணினதல் அவர் நல் விழாப் பொலிவு

கண்டார்தல்"

எனச் சேக்கிழார் பெருமான் கூறுகிறார். அவர் வாக்குப்படி முருகப்பெருமானை அலங்கரித்து திருவீதிகளில் வலம் வரச் செய்து திருவிழாப் பொலிவு காண்பதும் அன்று எல்லா மக்களுக்கும் உணவளித்து மகிழச்செய்வதும் பெரும் பேறு என்பதைக் கூறவேண்டியதில்லை.

# சிவராத்திரி

ஆண்டு தோறும் மாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தசிதிதி கூடிய புண்ணிய தினத்தில் மகா சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. பிரமதேவன் தமது சிருஷ்டியைக் கண்டு களிக்க திக்விஜயம் செய்தார். அளப்பரிய அண்டங்களின் பகுதிகளிற்கும் விஜயம் செய்தார். ஆங்காங்கிருந்த பிரஜாபதிகளும் பிரஜைகளும் பக்தியாய் வரவேற்று வணங்கினார். ஒரேயொரு மூர்த்தி மட்டும் அர்ச்சிக்காது யோக நித்திரையில் சயனித்திருந்த அயனுக்கு அதிசயமாகப்பட்டது. படுத்திருந்தவரை தட்டி எழுப்பி நீர் யார் என்று கேட்டார். மகனே நான் உனக்கு ஆதிமூலம் விஷ்னு என்றார். இதில் அபிப்பிராய பேதம் உண்டாயிற்று. இருவருள் யார் பெரியவர் என்று சண்டை மூண்டு வலுத்தது. அப்போது இருவருக்கிடையில் அழல் பிழம்பு தென்பட்டு அது கீழும் மேலும் ஊடுருவி நின்றது. தங்களுக்கு மூன்றாவது வஸ்துவாகிய இது யாதென வினா எழலாயிற்று. இதன் முடிவைக்காண பிரமதேவன் அன்னப்பறவை வடிவெடுத்து மேலே பறந்து போனார். அதன் அடியைக் காண ஹரியானவர் பன்றி வடிவெடுத்து பூமியைக்குடைந்து கொண்டு கீழ்நோக்கிச் சென்றார். எவ்வளவு தான் முயன்றும் இருவராலும் அந்த அக்கினிப்பிழம்பின் அடிமுடியைக் காண இயலவில்லை. அளப்பரிய அந்த வஸ்து யாதோ என அதனிடத்தே விண்ணபித்தனர். அப்பொழுது அப்படிக் காட்சி கொடுத்த சிவனாரும் தமது அகண்டாகார தேஜோமய சொரூபத்தை விளக்கி அயன், மாலின் ஆணவத்தை துடைத்தருளினார். பிரம்மா, விஷ்னு ஆகியோருக்கு ஜோதியாய் காட்சி கொடுத்தருளிய இராத்திரி சிவராத்திரி ஆகும்.

சிவராத்திரி பற்றிய வேறும்பல கதை களுண்டு. முன்பு ஊழிக்காலத்தில் உலக முடிவு நாளில் பிரம்மன் இறந்து போனதாகவும் அதனால் இரவுபொழுதில் உமையம்மை சிவனைப் பூசித்து அனைவரையும் மோட்சம் பெற வைத்தாள் என்றும் அந்த இரவே சிவராத்திரியென்றும் அழைக்கப் படுகிறது.

வேடனொருவன் காட்டிலே இரவுப் பொழுதைக் களிப்பதற்காக ஒரு வில்வ மரத்தில் ஏறி அமர்ந்தான். அவன் தூங்கிக் கீழே விழாமல் விளித்திருப்பதற்காக அம் மரத்தின் இலைகளைப் பறித்துக் கீழே போட்டுக்கொண்டிருந்தான். அவ்வில்வ மரத்தின் கீழ் சிவலிங்கம் ஒன்று இருந்தது. அவன் போட்ட இலைகள் அச்சிவலிங்கத்தின் மீது வீழ்ந்தன. அன்று சிவராத்திரி தினமானதினால் இரவு கண்விழித்து சிவலிங்கத்தின் மீது வில்வ இலை போட்ட வேடன் சிவகதி அடைந்தான் என்ற கதையுமுண்டு.

சிவராத்திரி ஐந்து வகையாகக் கூறப்படுகின்றது.

***மகா சிவராத்திரி*** :- ஆண்டு தோறும் மாசி மாதம் தேய்பிறை (கிருஷ்ணபட்சம்) சதுர்த்தசியன்று வருவது.

***யோக சிவராத்திரி*** :- திங்கட்கிழமை முழுவதும் அமாவாசையாக வந்தால் அது யோக சிவராத்திரி ஆகும்.

***நித்திய சிவராத்திரி*** :- பன்னிரண்டு மாதங்களிலும் ஒரு தேய்பிறைச் சதுர்த்தசி 12, வளர்பிறைச் சதுர்த்தசி 12 ஆக இருபத்து நான்கும் நித்திய சிவராத்திரி ஆகும்.

***பட்ச சிவராத்திரி*** :- தைமாதம் தேய்பிறை பிரதமை தொடங்கி பதின்மூன்று நாள் வரையில் நியமத்துடன் ஒரு பொழுது உண்டு. பதின்நான் காவது நாளான சதுர்த்தசியன்று உபவாசம் இருப்பது பட்ச சிவராத்திரி ஆகும்.

***மாத சிவராத்திரி*** :- மாத சிவராத்திரி மாதந் தோறும் வரும் அமாவாசைக்கு முன் தினமாகிய சதுர்த்தசி திதியில் (தேய்பிறை) வருவது மாத சிவராத்திரி ஆகும்.

# நவராத்திரி

நவராத்திரி என்பது ஒன்பது நாட்கள் செய்யப் படுகின்ற நோன்பாகும். புரட்டாதி மாதம் பூர்வபட்சம் பிரதமையிலிருந்து தொடங்கி பத்தாம் நாளான தசமியில் முடிவுறும் இவ்விழா சக்தி வழிபாட்டு விழாவாகும் பராசக்தியை விதிப்படி பிம்பத்திலும், கும்பத்திலும் எழுந்தருள வைத்து வழிபடல் முறையாகும். இவ்விழாவில் முதல் மூன்று நாட்கள் வீரத்தை வேண்டித் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் செல்வத்தை வேண்டி இலக்குமியையும், கடைசி மூன்று நாட்கள் கல்வியை வேண்டி சரஸ்வதியையும் வழிபடுவது முறையாகும். ஒன்பதாம் நாள் சரஸ்வதி பூசை எனவும், ஆயுத பூசை எனவும் சிறப்பித்து நூல்களையும், ஆயுதங் களையும் வைத்துப் படைத்து ஏற்றம் பெறுவர்.

பத்தாம் நாள் விஜயதசமி எனவும், அம்பு விடுதல் எனவும், வாழை வெட்டு, மானம்பூ விழா எனவும் வழங்கப் பெறும். பராசக்தி துர்க்கையாக நின்று ஒன்பது இரவுகள் தவமிருந்து சகல சக்திகளையும் தன்னுள் அடக்கி பத்தாம் நாள் மகுடாசுரனை சம்ஹாரம் செய்து தர்மத்தை நிலை நாட்டியதாகச் சொல்லப்படும். இவ்விழாவைக் கொண்டாடுவோர் சக்தியின் அருளால் வீரம்-செல்வம் - கல்வி ஆகியவற்றை பெற்று இன்புறுவர்.

மகிடாசூரன் என்ற கொடியவனே- அசுரனை ஒழித்துக் கட்டி சம்ஹாரம் செய்யும் பொருட்டு உமாதேவியார் அதிக பலம் பெறும் நிமித்தம் தவசு செய்த ஒன்பது தினங்களை நவராத்திரி எனக் கூறப் பெற்றுள்ளது. இந்த அடிப்படையில் ஆலயங்களில் இந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. அன்னைக்கும் மகிஷா சூரனுக்கும் போர் நடந்த போது தேவர்கள் பொம்மைகளைப் போல நின்று வேடிக்கை பார்த்தார்கள். அதிலிருந்து தான் கொலு வைக்கும் வழக்கம் வந்தது என்பர். இதன் தத்துவம் தாமஸ்குணம் ரஜோகுணம், சத்துவகுணம் என்ற மூன்று குணங்களையும் குறிக்கும். முதல் இரண்டு குணங்களைக் கடந்து சத்துவ குணத்தை அடையும் வழியையே இந்த நவராத்திரி கொலுப்படிகள் நமக்கு உணர்த்துகின்றன. கொலு வைப்பவர்கள் அமாவாசை அன்றே பொம்மைகளை வைத்துவிட வேண்டும். பொம்மைகளை ஒன்பது படிகள் வைத்து அமைத்தல் வேண்டும். மனிதன் ஆன்மீக ரீதியாக உயர்த்திச் செல்லும் கருத்துக்கு அமைய கீழ்ப்படி ஓர் அறிவு உயிரிலிருந்து மேல் நோக்கி ஒன்பது படிகள் அமையவேண்டும்.



**1ம் படி :–** புல், செடி, கொடி, மரம் ஆகிய தாவர பொம்மைகளை வைத்தல்.

**2ம் படி :–** நத்தை, சங்கு பொம்மைகளை வைத்தல்.

**3ம் படி :–** எறும்பு, கறையான் ஆகிய பொம்மைகளை வைத்தல்.

**4ம் படி :–** வண்டு, நண்டு பொம்மைகளை வைத்தல்.

**5ம் படி :–** விலங்குகள், பறவைகள் பொம்மைகளை வைத்தல்.

**6ம் படி :–** அறிவு படைத்த உயர்ந்த மனிதர்களது பொம்மைகளை வைத்தல்.

**7ம் படி :–** மகரிஷிகள் பொம்மைகளை வைத்தல்.

**8ம் படி :–** தேவர்கள், நவக்கிரக அதிபதிகள், பஞ்ச பூத தெய்வங்கள் அஷ்டதிக்குப், பாலகர்கள் பொம்மைகளை வைத்தல்.

**9ம் படி :–** பிரம்மா,விஷ்ணு,சிவன், சரஸ்வதி,லக்குமி, பார்வதி பொம்மைகள், ஆதிபராசக்தி நடு நாயகமாக இருக்க வைக்க வேண்டும்.

**10ம் படி :–** விஜயதசமி நாளாகும். இத்தினத்தில் வாழைவெட்டுத் திருவிழா நடைபெறுகிறது. இத் தினத்தில் சிறு பிள்ளைகளுக்கு முதன் முதலாக வித்தியாரம்பம், ஏடு தொடக்குதல் செய்யப்படுகிறது.

## கந்தர் சஷ்டி விரதம்

ஆண்டு தோறும் ஐப்பசித் திங்களில் பூர்வபட்ச பிரமை முதல் சஷ்டி திதி வரை ஆறு நாட்கள் உத்திராட நட்சத்திரத்தில் ஸ்ரீவள்ளி தெய்வயானை சமேதராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்குச் சோட சோபாராதனைப் பூசைகளோடு சிறப்பாக கொண்டாடப்படும். கந்தர் சஷ்டி விழா தம்பதி சமேதராய் எழுந்தருளும் திருமுருகப் பெருமானுக்கு எடுக்கப்படும் திருவிழாவாகும்.

சூரன்:- முனிவர்கள், தேவர்கள் எனப் பலதரப்பட்டவர்களைக் கொடுமைப்படுத்தினான் சிவபெருமான் தேவர்களின் வேண்டுதலுக்கிரங்கித் தருமத்தை நிலைநாட்ட திருவுளங் கொண்டு தனது நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு பொறிகளாகத் தோற்றுவித்தவரே ஆறுமுகனாவார். ஆறுமுகவனுக்கு உமையம்மை வேல் கொடுத்துச் சூரனை அழித்து வெற்றியுடன் திரும்புக என வாழ்த்தி அனுப்பி வைத்தரர். முருகன் அசுரப்படைகளோடு ஆறுநாள்கள் போர் புரிந்து அசுரப்படையும் அசுரர் குலத்தையும் அழித்து சஷ்டியன்று சூரனை வேலாயுதத்தால் இரண்டாகப் பிளந்து ஒரு பகுதியை தனக்கு மயில் வாகனமாகவும், மறு பகுதியைத் தனக்கு சேவல் கொடியாகவும் மாற்றிக் கொண்டார்.

## மாசிமக உற்சவம்

இருபத்தியேழு நட்சத்திரங்களில் ஒன்று மகம். தமிழ் மாதங்களில் ஒன்று மாசி. ஆகவே இந்த மாதத்தில் வரக்கூடிய மகநட்சத்திரம், மாசிமகம் என்று அழைக்கப்படுகின்றது. தைமாதம் முதற் கொண்டு ஆடிமாதம் முடிய உள்ள மாதங்கள் ஆறையும் பகல் பொழுது எனக் கூறப்படுகின்றது. ஆகவே இம்மாதங்களில் பௌர்ணமித் திதியை ஒட்டி வரக்கூடிய நட்சத்திரங்கள் ஒளி நிறைந்த விசேடம் பொருந்தியதாக அமைவதால் அன்றைய நாட்களில் உலகத்தை ஒளியால் உய்வித்தருளும் இறைவனை மக்கள் வழிபட ஒரு சிறந்த நாளாக, உகந்தநாளாக அமைத்துக் கொண்டு விழா எடுக்கலானார்கள்.

## திருவாதிரை விரதம்

மாதங்களில் சிறந்தது மார்கழி மாதமென்பர். திருவாதிரை திருநாள். வைகுண்ட ஏகாதசி, விநாயகர் சஷ்டி, ஹநுமந்த ஜெயந்தி என்ற முக்கிய விரதங்கள் வருவதும் இந்த மாதத்தில் தான். மார்கழி மாதம் முழுவதும் தேவர்களுக்கு அதிகாலை பிரம்ம முகூர்த்தம் ஆகும். சிவபெருமான் நட்சத்திரம் திருவாதிரை என்பர். இந்த மாதத்தில் திருவெம்பாவை விழா கொண்டாடப்படுகின்றது. மார்கழி மாதத்தில் வருகின்ற திருவாதி நட்சத்திரத்தில் ஆருத்திரா தரிசனம் அவரது ஐந்து தொழில்களான ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றை உணர்த்துவதாகும். மார்கழித் திங்களில் பௌர்ணமித் திதியும் திருவாதிரை நட்சத்திரமும் கூடிவரும் நன்நாளில் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விஷேச பூஜாராதனைகள் செய்து திருவிழா எடுத்து பெருவிழா வாகக் கொண்டாடி வருகின்றனர். ஆருத்திர தரிசனம் என்ற திருப்பெயரிலே உபயம் வைத்து ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விழா எடுக்கின்றனர். இதற்கு ஒரு புராணக்கதையும் உண்டு. மகாவிஷ்ணு பாற்கடலில் ஆதிசேஷன் மேலே பள்ளி கொண்டிருந்தார். திடீரென அவர் "அற்புதம், பிரமாதம்" எனச் சத்தம் போட்டார். அவர் சத்தம் போட்ட காரணம் என்னவென்று மகாலெட்சுமிக்கும், ஆதிசேஷனுக்கும் புரியவில்லை. தங்கள் சந்தேகத்தை மகா விஷ்ணுவிடம் கேட்டார்கள். திருவாதிரையான இன்றைக்கு சிவன் ஆடிய ஆனந்த தாண்டவத்தை ஞானக்கண்ணால் பார்த்தேன் என்றார். அவர் ஆனந்த தாண்டவத்தை பற்றி மகாவிஷ்ணு சொல்லச் சொல்ல ஆதிசேடனின் உடல் சிலிர்த்தது.

சிலித்ததின் காரணத்தைப் புரிந்து கொண்ட மகாவிஷ்ணு "ஆதிசேஷா உனது ஆசை எனக்கு புரிகிறது. அந்தத் தாண்டவத்தை நீ பார்க்க வேண்டும் என்றால் பூவுலகத்தில் பிறந்து தவம் இருப்பாயானால் அந்த தாண்டவத்தை நீயும் பார்க்கலாம் போய் வா" என்று அனுப்பி வைத்தார். ஆதிசேஷன் பதஞ்சலி முனிவராக அவதரித்தார். இவரது உடல் அமைப்பு இடுப்பு வரைக்கும் மனித உடலும் இடுப்புக்குக் கீழ் பாம்புத் தோற்றமுமாகும். பல கால தவப்பயனால் திருவாதிரை நாளன்று சிதம்பரத்தில் தம் திருநடனத்தை சிவபெருமான் அவருக்கு காட்டி அருளினார் எனக் கூறப்படுகின்றது.

## பங்குனி உத்தரவிரதம்

பங்குனி மாதத்தில் பௌர்ணமியோடு கூடிய உத்தர நட்சத்தினத்தன்று கொண்டாடும் விழா பங்குனி உத்தர விழா. இந் நாளில் தான் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்ததாகச் சொல்லப் படுகின்றது. தன் நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதனுக்கும் இந் நாளில் தான் புத்துயிர் அளித்தார். அவர் திருமணம் கொண்டருளிய பங்குனி உத்தர நாளே முருகன் அவதாரம் செய்ய சிவபெருமான் திருவுள்ளம் கொண்டருளிய காலம், சித்தாந்த சாத்திரத்தின் படி சிவனே முருகன். எனவே இவ் விழாவும், விரதமும் முருகனுக்கும் பொருந்துவ தாயிற்று. ஆகவே பங்குனி உத்தர விழா மக்கள் பிரம்மசாரியமாகிய யோக வாழ்க்கையை விட்டுப்

போக வாழ்க்கையைப் பொருந்தப் பெருமான் நடந்து காட்டிய விழாவாகும். சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் பிறந்த நாளும் ஆண்டாள் அரங்கநாதன் திருமணம், ஸ்ரீ இராமர் - சீதை திருமணம் எனப் பல தெய்வத் திருமணங்கள் கூட இந்தப் பங்குனி உத்தர நாளில் தான் நடந்திருக்கின்றன.

## சித்திராபௌர்ணமி

இந்து தர்மம் ஒரு சனாதன தர்மம். பன்னிரண்டு திங்களுக்கும் விழாக்கள் உள்ளன. இவற்றுக்குக் காரணங்களும் உண்டு. இதனால் பூரண விழிப்பு அல்லது ஆத்ம போதம் மனிதனுக்கு உண்டாகின்றது. கரணங்கள் ஓய்ந்த இடத்தில் எஞ்சியிருப்பது சுத்த சிவம். அப்பெயரை பல பெயரிட்டுச் சமயங்கள் கூறுகின்றன. அந்த வகையில் சித்திரைப் பௌர்ணமியில் வளர்பிறையில் வரும் சமய விழாவே "சித்திரா பௌர்ணமி ஆகும்" இது சிவனிற்கு உகந்த விழாவாகும்.

உலக உயிர்களின் பாவபுண்ணியக் கணக்கை எழுத ஒருவரை நியமிக்க வேண்டும் என திருவுளம் கொண்டு சிவபெருமான் பொற்பலகையில் ஓர் அழகான உருவத்தை வரைந்தார். சிவன் வரைந்த உருவம் உயிர் பெற்றது. சித்திரத்தில் இருந்து வந்ததால் சித்திரபுத்திரன் எனப் பெயர் பெற்றார். அவர் தோன்றிய நாளும் சித்திரைத் திங்கள் பூரணைத் திதியில் சித்திரை நட்சத்திரத்தில் தோன்றியதாக சொல்லப்படுகின்றது. இவரே இயமனின் கணக்குப் பிள்ளையாவார். இவர் உலக உயிர்களின் பாவ புண்ணிய கணக்கை எழுதி வருபவர் எனப் புராணக் கதைகள் கூறுகின்றன. இறந்த தாய் மார்களின் ஆத்ம சாந்திப் பிதிர்க் கருமம் இந்நாளில் செய்வது அதி விஷேசம் என கருதப்படுகின்றது.

## வைகாசி விசாக விரதம்

வைகாசி விசாக நட்சத்திரத்தன்று சிவசக்தித் திருக்குமாரனாகிய திரு முருகப்பிரான் அவர்கள் அவதரித்தார்கள். அசுரர்களை அழித்து தேவர்களைக் காக்க சிவபெருமான் தன் நெற்றிக்கண்ணைத் திறந்தார். நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு பொறிகள் தோன்றின. அக்கினி பகவான் அந்த பொறிகளை சரவணப்பொய்கையில் விட்டார்.

அப்பொறிகள் ஆறு குழந்தைகளாகின. உமையம்மை அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்றாகத் தூக்கி ஆறு முகங்களையுடைய ஒரு குழந்தையாக உருமாற்றிக் கொடுத்தார். அந்த நாளே வைகாசி விசாக நட்சத்திர நாள். முருகப் பெருமான் தமிழர்கள் ஏற்றித் தொழும் இறைவனாவார். இந்த புனித நாளை நினைவுகொண்டு முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக தீபாராதனை செய்து அவனை வழிபட்டு ஆண்டு தோறும் அந்நாளில் முருகனுக்கு விழா எடுத்து சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

## ஆடி அமாவாசை விரதம்

மாதந் தோறும் வரும் அமாவாசை நாள். இறந்த தமது முன்னோர்களை நினைத்து விரதம் அனுஷ்டிக்க ஏற்றதாகும். இவற்றிலே தைமாதம், ஆடிமாதம், புரட்டாதி மாதத்தில் வரும் அமாவாசை ஆகிய மூன்றும் விஷேசமானது. இவற்றில் அதி விஷேசம் ஆடி அமாவாசை விரதம் ஆகும். இதற்கு காரணம் ஆடி மாதத்தில் சந்திரன் உச்சம் பெற்ற கடகராசியில் சூரியன் சஞ்சரிக்கின்றமையாகும். சூரியன் சிவ அம்சமாகும். இதைப்போலவே சந்திரன் சக்தியின் அம்சமாகும். இவ்விரு அம்சங்களும் ஒன்று சேர்வதே ஆடி அமாவாசை விரதத்தின் விஷேசம் ஆகும். இறந்த தந்தைமார்களது ஆத்மசாந்திப் பிதிர்க்கடமை இந்நாளில் செய்வது அதிவிஷேசம் எனக் கொள்ளப்படுகிறது.

## திருக்கார்த்திகை விரதம்

ஆக்கல் தொழில் புரிவதால் தானே பெரியவன் என்று பிரம்மாவும், காத்தல் தொழில் புரிவதால் தானே பெரியவன் என்று திருமாலும் போட்டியிட்டு முடிவுகாண சிவபெருமானிடம் சென்றார்கள். தனது முடியை பிரம்மாவும் அடியைத் திருமாலும் கண்டுவரப் பணித்த சிவன் விண்ணுக்கும் மண்ணுக்குமாய் ஜோதிவடிவு கொண்டு பேருருப் பெற்று நின்றார். பிரம்மன் அன்னப்பறவை உருக் கொண்டு வான் மார்க்கமாக முடியை நோக்கிச் சென்றும், விஷ்னு பன்றி உருவெடுத்து பூமியை அகழ்ந்து அடியை நோக்கிச் சென்றும் காண முடியாது இருவரும் தோல்வியுடன் திரும்பினர். இருவரும் சிவனே பெரியவன் என ஏற்றுக் கொண்டனர். பிரம்மாவும் விஷ்னுவும் கண்ட ஜோதி வடிவான காட்சியை எல்லோரிற்கும் காட்டிட எண்ணிய சிவபெருமான் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தை அதற்கான நாளாக எடுத்துக் கொண்டார். இத்தினத்தை திருவண்ணாமலையில் கார்த்திகை தீப விழாவாக மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

சிவபெருமான் திரிபுர அசுரரை எரித்த விழாவும் இத்துடன் இணைந்து வருகின்றது. ஆலயங்களின் முன் பக்கம் வலிப்பனையினை (இளம் பனை) நட்டு அதைச்சுற்றி ஓலைகளைக்

குடிசைபோல் கட்டி தீ வைப்பார்கள். இதனை சொக்கப்பனை என்பார்கள். திருவண்ணாமலையில் ஏற்படும் தீபத்தை காணமுடியாத மக்கள் இக் காட்சியை தாங்கள் வாழும் பகுதியில் உள்ள ஆலயங்களில் கண்டு களிப்பார்கள்.

## ஸ்ரீ ராம நவமி விரதம்

ஸ்ரீ இராமர் சித்திரை மாதம் வளர்பிறை நவமித்திதியில் பிறந்தார். இந்நாளையே நாம் ஸ்ரீ ராம நவமி விரதமாக கொண்டாடுகின்றோம். இவ்விரதம் இரண்டு வகையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. முதல் வகை சித்திரை மாதப் பூர்வ பட்ஷம் (வளர்பிறை) பிரதமைத் திதியில் இருந்து நவமித்திதி வரையும் உள்ள ஒன்பது நாட்கள். இதற்கு கர்போஸ் தவம் என்று பெயர். இரண்டாவது வகை நவமித் திதியில் ஆரம்பித்து அடுத்து வரும் ஒன்பது நாட்களும் அனுஷ்டிப்பது. இதற்கு ஜன்மோதீஸ்வம் என்று பெயர். ஸ்ரீ ராம அவதாரம் கொண்ட நாளை விஷேச வழிபாட்டு நாளாகவும், அவருக்கு தீபாராதனை செய்து இராமர் அவதரித்த அந்த நாளை நினைவு கூர்ந்து திருவிழாவாகக் கொண்டாடப்படும் நாளாக ஸ்ரீ ராம நவமி உள்ளது.

## பிரதோஷ விரதம்

நரைமூப்பு, இன்பப் போதை, மரணம் போன்ற துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கும், அசுரர்களின் கொடுமையிலிருந்து தப்புவதற்கும் திருமாலின் ஆலோசனைப் படி மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள். அம்மலை சரிந்து விடாது கூர்ம அவதாரம் என்னும் ஆமை வடிவம் எடுத்து பரந்தாமன் மலையைத் தாங்கிப் பிடித்தார். அந்த நாள் தசமித்திதி. மறுநாள் ஏகாதசித் திதியன்று வாசுகிப் பாம்பிற்கு ஏற்பட்ட வலியால் நஞ்சை உமிழ்ந்தது. இது "ஆலகாலம்" எனப் பெயர் பெற்றது. இந்த நஞ்சால் பரந்தாமன் கருநீல நிறமானார். அந்த நஞ்சு தேவதேவர்களைத் தாக்க அவர்கள் பயந்து சிவபெருமானிடம் முறையிட திருக்கைலாயத்திற்கு ஓடினார்கள். அவர்கள் முதலில் நந்திதேவரைக் கடந்து பாற்கடலை கடைந்த போது கொடிய நஞ்சு வந்துவிட்டது. மார்க்கம் காணச் சர்வேஸ்வரனைக் காண வந்தோம் என்றார்கள். நந்திதேவர் சிவனிடம் விபரத்தைக் கூறினார். சிவபெருமான் தேவர்களை உள்ளே அழைக்க அவர்கள் சென்று தங்களைக் காக்கும் படி இறைஞ்சினார்கள். சிவபெருமான் தனதருகே நின்ற சுந்தரரைப் பார்த்து "சுந்தரா அவ்விஷத்தை இவ்விடத்துக்கு கொண்டுவா" என்றார். சுந்தரர் நஞ்சை உருட்டிக் கொண்டு வந்து சிவபெருமானிடம் கொடுத்தார். சிவபெருமான் நஞ்சை விழுங்க உள்முகத்திலும், வெளிமுகத்திலும் உள்ள உயிர்கள் அழிந்து விடும் என்பதால் உமாதேவியார் தம் கைகளால் சிவபெருமானைப் பிடித்துக் கொண்டார். இதன் காரணமாக நீலகண்டன் எனப் பெயர் பெற்றார். இவ்வாறு காத்த தினம் ஏகாதசித்திதி ஆகும். அதைத் தொடர்ந்து மீண்டும் தேவர்கள் அசுரர்களுடன் பாற்கடலைக் கடைந்தார்கள். மீண்டும் கடைந்ததன் விளைவாக அமிர்தம் கிடைத்தது. அமுதத்தை அசுரர்கள் உண்டால் மிகு பலம் பெறுவாராதலால் மகாவிஷ்னு அழகிய மோகினி வடிவத்தால் அவர்களை மயக்க வைத்து அமுதத்தை தேவர்களிற்குப் பகிர்ந்து கொடுத்தார். அமுதத்தை உண்ட தேவர்கள் அமுதம் கிடைக்கக் காரண மாயிருந்த சிவனை மறந்தார்கள். மறுநாள் திரியோதசித் திதியன்று தங்கள் செயலுக்கு வருந்தித் தேவர்கள் சிவனிடம் மன்னிக்குமாறு வேண்டினார் கள். அவர்களை மன்னித்த சிவன் தேவர்களை மகிழ்விக்க பார்வதி அன்னை பார்த்திருக்க மாலை நான்கு மணிமுதல் ஆறு மணிவரையான நேரத்தில் நந்திதேவரின் இரு கொம்புகளுக்கு இடையில் நின்று தாண்டவம் ஆடினார். அதுமுதல் திரியோதசித் திதியன்று மாலை நேரம் பிரதோஷகாலம் என்று வழங்கலாயிற்று. எம்பெருமான் விஷம் உண்டதும், திருநடனக் காட்சி அருளியதும் சனிக்கிழமையோடு கூடிய பிரதோஷகாலம் ஆகையால் சனிப்பிரதோஷம் மிகவும் சிறந்ததென்பார்கள். பிரதோஷம் என்பது தோஷங்களை நிவர்த்தி செய்வது என்பது பொருள்.

**பிரதோஷ விரதம் ஐந்து வகைப்படும்**

1. **நித்திய பிரதோஷம் :-** இந்த பிரதோஷ காலத்தில் ஆடிய தாண்டவத்தின் பெயர் "சந்தியா தாண்டவம்" தினமும் மாலைப்பொழுது.

2. **பட்ச பிரதோஷம் :-** வளர்பிறையில் சதுர்த்தசித்திதியில் மாலையில் வருவது. இந்த பிரதோஷ காலத்தில் ஆடிய தாண்டவத்தின் பெயர் சதுரானந்த தாண்டவம்

3. **மாதப் பிரதோஷம் :-** வளர்பிறையில் சதுர்த்தசித்திதியில் மாலையில் வருவது. இந்த பிரதோஷ காலத்தில் ஆடிய தாண்டவத்தின் பெயர் லதா தாண்டவம்

4. **மஹா பிரதோஷம் :-** தேய்பிறை திரியோதசித் திதியில் சனிக்கிழமை களில் மாலையில் வருவது. இந்த பிரதோஷ காலத்தில் ஆடிய தாண்டவத்தின் பெயர் நவசக்தி தாண்டவம்

5. **பிரளய பிரதோஷம் :-** பிரளய காலத்தில்

உயிர்கள் எல்லாம் சிவனிடம் ஒடுங்கும். அதுவே பிரளய பிரதோஷம் எனப்படும். பிரதோஷ காலத்தில் ஆடிய தாண்டவத்தின் பெயர் ஊர்த்துவ தாண்டவம் என்று பெயர்படும்.

**சிவபிரான் திருநடனங்கள்**

1. **ஆனந்த தாண்டவம்:-** சிதம்பரத்தில் கனகசபையில் முயலகன் மீது நின்று ஆடிய திருநடனம்.

2. **கால் மாறி ஆடும் திருநடனம்:-** மதுரையில் நிகழ்வது. இது பாண்டிய மன்னனின் வேண்டுகோட்கிணங்கி ஆடியது.

3. **பாண்டரங்கம்:-** திரிபுரம் எரிக்கப் புறப்பட்ட வேளை ஆடியது.

4. **கொடிகொட்டி:-** திரிபுரதகனம் முடிந்த பின் ஆடியது.

5. **சாந்தியா நிருத்தம்:-** பாற்கடலில் நஞ்சுண்ட பின் ஆடியது.

6. **சண்ட தாண்டவம்:-** இறைவன் பயங்கர வடிவு கொண்டு பல வாத்தியங்கள் முழங்க ஆலங்காட்டில் காளியுடன் ஆடியது.

7. **கௌரி தாண்டவம்:-** தாருக வனத்திலிருந்து திரும்பி நிகழ்ந்ததைக் கௌரிக்கு உணர்த்த ஆடியது.

8. **வீரட்டகாச நடனம்:-** முருகன் உணர்த்திய பிரணவப் பெருளைக் கேட்டதும் வீறு கொண்டு தணிகையில் ஆடியது.

9. **அனவரத நடனம்:-** பஞ்ச கிருத்திய நடனத்தினை உலகம் உய்ய வேண்டி அனவரதமும் இயற்றி இறைவன் எம்மை உய்வித்ததற் பொருட்டு ஆடுவது.

# கேதாரி கௌரி விரதம்

இவ்விரதம் புரட்டாதி மாதம் சுக்கிலபட்ச தசமி தொடக்கம் ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சம் தீபாவளி அமாவாசை வரை இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்கப்படுகிறது.

பிருங்கி என்ற முனிவர் கைலாயத்தில் சிவன் உமை உட்பட பலர் முன் நடனம் ஆடினார் பலரும் அவரைப் பாராட்டினார்கள் பின்னர் பிருங்கி முனிவர் சிவபெருமானை மட்டும் வலம் வந்து தொழுதார். இதைப்பார்த்த உமாதேவியாருக்கு கோபம் வந்தது. "முனிவரே நீர் என்னைப் புறக்கணித்து பரமேஸ்வரரை மட்டும் வணங்கிய படியால் நீர் சக்தியின்றிப் போவீர்" என்று சாபம் கொடுத்தார். உடனே முனிவர் சக்தி குன்றி நிற்கக்கூட முடியாமல் நிலத்தில் விழுந்தார் சிவபெருமான் அவருக்கு மூன்றாவது காலைக் கொடுத்து உதவினார். பிருங்கி முனிவரின் இச் செயலால் மனவருத்தம் அடைந்த உமாதேவியார் தானும் சிவனும் தனித்தனியாக இருந்ததால் அல்லவா பிருங்கி முனிவர் இப்படிச் செய்தார். இருவரும் ஒன்றாகி விட்டால் இப்படி நடக்காது என்று எண்ணி திருக்கைலாயத்தை விட்டு பூமிக்கு வந்தார்.

அங்கு இருந்த கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்றார். கைலாயத்தில் நடந்த சம்பவத்தினை முனிவரிடம் அன்னை சொன்னார். இதற்கு என்ன செய்ய வேண்டும் என முனிவரிடம் கேட்டார். "கேதாரி கௌரி விரதம்" என்ற விரதம் இருக்கிறது. அவ்விரதத்தை நீங்கள் இருபத்தொரு நாட்கள் தொடர்ந்து பிடிக்க வேண்டும். அப்படி நீங்கள் பிடித்தால் இறைவன் உங்களுக்கு தனது உடலின் பாதியை தருவார் என்றார். அவர் சொன்னதைப் போலவே அன்னை அவ் விரதத்தை பிடித்து அர்த்தநாரீஸ்வரரானார். அப்பொழுதும் பிருங்கி முனிவர் தனது தவ ஆற்றலால் வண்டு உருவம் கொண்டு அர்த்தநாரீஸ்வரின் மார்பினூடாகத் துளைத்து சிவனை மட்டுமே வழிபட்டார். அதைப்பார்த்த அன்னை கோபிக்காது ஆசீர்வதித்து அவரை புத்திரராக்கிக் கொண்டார். மேலும் இவ்விரதத்தை மேற்கொள்பவர்க்கெல்லாம் அருள் வழங்கும் படி அன்னை சிவனை வேண்டிக் கொண்டார்.

இவ்விரதத்தை தொடக்க நாளிலிருந்து ஒரு வெற்றிலை, ஒரு பாக்கு, ஒரு பழம், பலகாரம், அன்னம் முதலியவற்றை வைத்து வழிபாடு செய்ய வேண்டும். இந்த எண்ணிக்கையை ஒவ்வொன்றாக ஒவ்வொரு நாளும் கூட்டிக் கடைசி நாளன்று இருத்தொரு எண்ணிக்கை கொண்ட பொருட்களை வைப்பதோடு இருபத்தொரு இழையிலான (முடிச்சு) நோன்புக் கயிற்றை தயாரித்து அக்கயிற்றுக்கு தீபம் காட்டி பூஜை செய்து இறுதி நாளன்று நோன்புக் கயிற்றை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் அணிந்து கொள்ள வேண்டும்.

இவ்விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு வறுமை நீங்கும், குடும்ப ஒற்றுமை ஏற்படும், புத்திர பாக்கியம் கிடைக்கும்.

# முருகநெறியில்
# திருமுருகாற்றுப் படையும் கந்தபுராணமும்

பேராசிரியர். கலாநிதி. மா. வேதநாதன்
தலைவர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்மன் ஆலயம்,
மேநாள் தலைவர்,
இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

முருக வணக்கம் மிகவும் தொண்மை வாய்ந்தது. தமிழ் நாட்டில் முருக வழிபாடு சிறப்புற்றிருந்ததை நக்கீரர் இயற்றிய திருமுரு காற்றுப்படை, கச்சியப்பர் அருளிய கந்த புராணம் ஆகிய சைவத்தமிழிலக்கியங்கள் மூலம் நன்கறிய முடிகின்றது. பதினொராம் திருமுறையுள் ஒன்றாக விளங்கும் திருமுரு காற்றுப்படையானது முந்நூற்றுப் பதினேழு அடிகளைக் கொண்டு ஆசிரியப்பாவால் அமைந்து விளங்குகின்றது. இந்நூல் முருக நெறிக்குரிய தொன்மை வாய்ந்த தமிழ்த் தோத்திர நூலகவும் பழமை வாய்ந்த பக்திப் பனுவலாகவும் காணப்படுகின்றது. சைவத் தமிழ் பேரிலக்கியங் களுள் தனிச்சிறப்புடன் விளங்கும் கந்தபுரான மானது ஆறு காண்டங்களில் பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து விருத்தப்பாக்களில் கந்தன் பெருமை களை மட்டுமன்றிச் சிவபரத்துவத்தையும் சிறப்பாகச் சித்திரிக்கின்றது. இவ்விரு நூல்களும் முருக நெறியை விளக்கும் தமிழ் இலக்கியங்களாகக் காணப்படினும் இவை எழுந்த காலப்பகுதிகள் வெவ்வேறானவை என்பது, பல நூற்றாண்டுகள் இடைவெளியுடையவை என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாய்வுக்கட்டுரையானது இவ்வரு இலக்கியங்களிலும் ஒப்புமையாகக் காணப் படுகின்ற முருகனின் முழு முதற் தன்மை, முருகனின் திருவுருவ வர்ணனை, முருக வடிவம், முருகன் உறையும் இடங்கள், முருக நாமங்கள், முருக வழிபாட்டு முறைகள், முருக வழிபாட்டின் பயன் என்ப வற்றை ஆராய்வதாக அமைகின்றது.

**முருகன் என்ற சொல்**

"முருகன்" என்ற சொல்லுக்கு "முருகை" உடையவன் என்பது பொருளாகும். "முருகு" என்ற சொல் "அன்" என்னும் ஆண்பால் விகுதி பெற்று "முருகன்" என்றாயிற்று. திருமுருகாற்றுப்படை முருகு என்ற சொல்லை முருகனுக்குரியதாகக் குறிப்பிடு கின்றது. "முருகு" என்ற சொல்லுக்கு அழகு. இளமை, நறுமணம், தெய்வத்தன்மை எனப் பல பொருள்கள் உள்ளன. திருமுருகாற்றுப் படையானது முருகனை நீங்காத அழகுடையவனாகவும், மாறாத இளமை யுடையவனாகவும், நறுமணம் கமழ்கின்றவனாகவும், தெய்வத்தன்மை வாய்ந்தவனாகவும் வர்ணிக்கின்றது. "முருக (திரு 269) என்ற மூன்றெழுத்து முருகக் கடவுளின் பெரும் பெயர் எனத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது. "முருகன்" என்ற பெயர் கந்த புராணத்தின் பல இடங்களிற் காணப்படு வதுடன் கந்தனும் முருகனும் ஒருவரே என்பதைக் குறிக்கும் "கந்தனாம் முருகன்" (4:2:5) என்ற பெயரையும் அந்நூல் குறிப்பிடுகின்றது. மேலும் கந்தனையும் முருகனையும் இணைத்து "கந்த முருகன்" (6:24:114) என்ற பெயரையும் அந்நூல் இயம்புகின்றது. இவ் வகையில் கந்தமுருக இணைப்புப் பாலமாக கந்த புராணத்தைக் கொள்ள முடியும்.

**முருகனின் தோற்றம்**

"முருகன்" - "உலக உவப்ப" (1) தோன்றினார் எனத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுவது போலவே கந்தபுராணமும் "உலகம் உய்ய" (1:11:92) முருகன் உதித்தனன் எனக் குறிப்பிடுகின்றது. ஆறுமுகம் கொண்ட முக்கண்ணனுடைய நெற்றிக் கண்ணாகிய அனற்கண்ணிலே தோன்றிய ஆறு அனற் பொறி களை அனற் கடவுளாகிய அக்கினி தன் அங்கையில் ஏற்றுச்சென்று சரவணப்பொய்கையில் சோர்த்த போது அருந்ததி ஒழிந்த ஆறு இருடி பத்தினியரும் அந்த ஆறு பொறிகளிலிருந்தும் தோன்றிய ஆறு குழந்தைகளையும் தாமே பெற்ற தாயாராகக் கருதிப் போற்றி வளர்த்தவர் என்பதையே

**"நெடும் பெருஞ்சிமைத்து நீலப் பைஞ்சுனை**
**ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப**
**அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ"**

என்ற திருமுருகாற்றுப்படை வரிகள் (253 - 255)

புலப்படுத்துவதாக அறிஞர் கருதுவர். (துரை அரங்கசாமி 1972:146) கந்தபுராணமும் சிவபெருமானுடைய ஆறு திருமுகங்களிலும் உள்ள நெற்றிக் கண்களிலிருந்து தோன்றிய அக்கினப் பொறிகளை வாயுவும் அக்கினியும் கங்கையில் விட்டதாகவும், அவற்றை கங்காதேவி சரவணப்பொய்கையில் சேர்த்ததாகவும் அந்த ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகளாக சரவணப் பொய்கையில் விளங்கிய போது ஆறு கார்த்திகை மாதர் அக்குழந்தை களுக்கு முலைப்பாலூட்டி வளர்த்ததாகவும் குறிப்பிடுவதும் (1:11:43-91) அச்சோதிப் பிழம்பே கருணைகூர் முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு திருமுருகனாக உதித்தாகவும் கூறப்படுவதும் (1:11:92) ஒப்புநோக்கற் பாலதாகும். முருகன் சிவபெருமானுடைய நெற்றிக் கண்களிலிருந்து தோன்றிய செய்தி கந்தபுராணத் தில் மிகத் தெளிவாகவும், திருமுருகாற்றுப் படையில் ஊகித்துமே அறியமுடிகின்ற தெனலாம்.

**முருகனின் முழுமுதற்றன்மை**

திருமுருகாற்றுப்படை முருகனின் முழு முதற்றன்மையை மட்டும் விவரிக்கும் நூலாக விளங்குகின்றது. ஆனால் கந்தபுராணமானது முருகனின் முழுமுதற் தன்மையைச் சிறப்பாகச் சித்தரிக்கும் நூலாக மட்டுமன்றி சிவனின் பரம் பொருட் தன்மையை நன்கு எடுத்துக்காட்டும் இலக்கியமாக காணப்படுகின்றது. பிரமனுக்கு ஏற்பட்ட சாபத்தை நீக்குவான் வேண்டி திருமாலும், சிவபெருமானும், இந்திரனும் பிறரும் முருகனைக் காண வந்தனர் (148 - 174) என்ற திருமுருகாற்றுப் படைக் குறிப்பானது முருகனின் முழுமுதற் தன்மையை புலப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறே கந்தபுராணத்திலும் பிரமனைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்காக தேவர்களுடன் சிவனே கந்தனிடம் வந்ததாகக் கூறப்பெற்றிருப்பது (1:17:23) ஒப்பு நோக்கற் பாலதாகும். கந்தபுராணத்தின் அயனைச் சிறைநீக்குபடலம் (1.17) இதனையே விபரிக்கின்றது.

**முருகனின் திருவுருவ வர்ணனை**

முருகனின் திருவுருவ வர்ணனை யைச் சித்தரிப்பதில் திருமுருகாற்றுப் படையும், கந்த புராணமும் பல நிலைகளில் ஒப்புமையுள்ளவையாக விளங்குகின்றன.

**முருகவடிவம்**

முருக வடிவங்களுள் ஆறுமுகங்களும் (103) பன்னிரண்டு கைகளும் (118) உடைய திருமுருகனின் வடிவத்தையே திருமுருகாற்றுப்படை சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. கந்தபுராணத்தில் முருகனின் பல திருக்கோலங்கள் கூறப்பெற்றிருப்பினும் முகங் களாறும், கரங்கள் பன்னிரண்டுமுடைய முருகனின் திருக்கோலமே சிறப்பாக கூறப்பெற்றிருப்பது குறிப பிடப்பாலதாகும். இத்திருக்கோலத்திலேயே முருகன் சூரனுடன் யுத்தம் புரிந்ததாக கந்தபுராணம் குறிப்பிடு கின்றது. (4:13:46) திருமுருகாற்றுப்படை கூறும் முருகன் கைகளில் காணப்படும் அங்குசம், வேல், மணி (110 - 115) என்பன கந்த புராணம் காட்டும் ஆறுமுகனின் கைகளிலும் (3.10.4) இடம் பெற்றிருப்பது ஒப்புநோக்கற்பாலதாகும்.

**முருகனின் ஒளி வடிவம்**

முருகனை திருமுருகாற்றுப்படை பிரகாசிக் கின்ற சூரியனின் பேரொளி வடிவ முடையனவாகச் சித்தரிக்கின்றது. இதனை

**"உலகமுவப்ப வலனேர்பு திரிதரு**
**பலர்புகழ்ஞாயிறு கடற்கண்டாஅங்**
**கோவற விமைக்கும் சேண் விளங்கவிரொளி"**
**(திருமு. 1–3)**

என்ற வரிகளாலறியலாம் சோதிப் பிளம்பே கந்தனாக உதித்தனன் (1:11:92) என்று கந்த புராணம் குறிப்பிடுவது ஒப்புநோக்கற்பாலதாகும். கந்தபுராணம் முருகனைச் சோதி (1:14:82) என்றும் குறிப்பிடுவது நோக்கற்பாலதாகும்.

**முருகனின் நிறமும் ஆடையும்**

முருகன் செந்நிறமுடைய சிவந்த ஆடை தரித்திருப்பவன் என்பதைத் திருமுரு காற்றுப்படை "செய்யன் சிவந்தவாடையன்" (திருமு 206) எனக் கூறுகின்றது. கந்தபுராணமும் முருகனை "செஞ்சுடர் மேனி வள்ளல்" (4:12:453) என்றும் "செய்யவன்" (1:24:65) செஞ்செவ்வேள் (5:2:203) என்று கூறு கின்றமை ஒப்புநோக்கற்பாலதாகும்.

**முருகனின் வாகனம்**

பண்டைக் காலத்தில் முருகனுக்குரிய வாகனங்களாக களிறு, ஆடு, மயில் என்பன விளங்கியதை "கால் கிளர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு" (82) "தகரன்" "மஞ்ஞையன்" (210) என்ற திருமுருகாற்றுப்படைவரிகளால் அறிய முடிகின்றது. கந்தபுராணத்தில் முருகனின் வாகனமாக களிறு குறிப்பிடப்படவில்லையாயினும் மயில், ஆடு என்பவற்றை கந்தன் வாகனமாகக் கொண்டவன் என்பதைக் கந்தபுராணம் "புது

மயிலூர்பரன்" (அவை. 13) "மேடமிசை ஊர்பரன்" (4:13:198 ) என மொழிகின்றது. முருகன் ஆட்டுக்கிடாவை வாகனமாகக் கொண்ட வரலாற்றைக் கூற எழுந்ததே கந்தபுராணத்தின் தகரேறுபடலமாகும் (1:15). சுவாமிமலை முருகனுக்கு யானையும், திருச்செந்தூர் முருகனுக்கும், சிக்கல் சிங்காரவேலனுக்கும் ஆடும் வாகனமாக விளங்குகின்றமை குறிப்பிடற்பாலதாகும்.

**முருகனின் கொடி**

முருகனுக்கு கோழியும், மயிலும் கொடியாக விளங்கியதை "கோழியோங்கிய வென்றடு விறற்கொடி" (38) "வாரணக் கொடியொடு வயிற்படநிற்கு (219), "பல் பொறிமஞ்சை வெல் கொடியதவ" (122), "ஆண்டலைக் கொடியொடு மண்ணி அமைவர" (227), "சேவலங்கொடி" (210-211) என்ற திருமுருகாற்றுப்படை வரிகள் விளக்கி நிற்கின்றன. கந்தபுராணமும் முருகன் கோழிக்கொடியுடையவன் என்பதை "ஆண்டலை உயர்ந்தவன்" (5:2:7) சேவலை உயரிய தேவநாயகன்" (5:1:32) என்ற வரிகளால் குறித்து நிற்கின்றமை ஒப்புநோக்கற்பாலதாகும்.

**முருகனின் மாலை**

முருகன் வெட்சிமாலையினை அணிந் திருந்தானென்பதை "செச்சைக் கண்ணியன்" (208) எனத் திருமுருகாற்றுப் படை மொழிகின்றது. கந்தபுராணமும் முருகனை "செச்சையுஞ்சூடிய குமர" (1:14:69), "செச்சை மௌலியான்" (6:24:214) என்று கூறுவது ஒப்புநோக்கற்பாலதாகும்.

**முருகனின் ஆறுபடைவீடுகள்**

தமிழ்நாட்டில் முருகன் கோயில் கொண்டு விளங்கும் ஆறு திருத்தலங்களை "ஆறுபடை வீடுகள்" என அழைப்பது தொன்று தொட்டு இன்று வரை நிலவும் சமயமரபாகும். திருமுருகாற்றுப் படையானது திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவிநன்குடி, திருஏரகம், குன்றுதோறிடல், பழமுதிர்ச்சோலை என்ற ஆறு இடங்களில் முருகன் எழுந்தருளியிருந்து அருள்பாலிப்பதை விவரிப்பதாக அமைந்து விளங்குகின்றது. இந்த ஒழுங்கு முறையிலேயே முருகன் வீற்றிருக்கும் சிறப்பினை கந்தபுராணத்தின் கடவுள் வாழ்த்தில் "திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்" (12), "சீரலைவாய் வருசேயைப் போற்றுவோம்" (13), "ஆவினன் குடிவரும்மலற் போற்றுவாம்" (14), "ஏரகத் தறு முகனடிகனேத்துவாம்" (15), "குன்று தொறாடிய குமரற் போற்றுவோம்" (16), "பழமுதிர் சோலையம் பகவற் போற்றுலாம்" (17) எனத் தனித்தனி பாடல்களிற் குறிப்பிடுவது ஒப்புநோக்கற்பாலதாகும். முருகன் உறையும் மேற்குறிப்பிட்ட ஆறு தலங் களையே "ஆறுபடைவீடுகள்" என அழைப்பர். முருகனின் இந்த ஆறுபடை வீடுகளை அருணகிரி நாதரும் குறிப்பிடுகின்றார். முருகன் போர் புரிவதற் குத் தங்கியிருந்த போர்ப்பாசறைகளே ஆறுபடைவீடு எனவும், முருகனை வழிபடச் செல்வோருக்கு வழிகூறி அவர்களை ஆற்றுப்படுத்தி அனுப்பு தலாகிய ஆற்றுப்படையினையே ஆறுபடைவீடுகள் எனவும் அறிஞர் கருதுவர் (Kandaswamy 1997:148). ஆறுபடைவீடுகள் எவை என்பதில் மாறுபட்ட கருத்துக்களும் நிலவி வருகின்றன. இலங்கை யிலுள்ள கதிர்காமத்தையும் முருகனின் ஒரு படை வீடாகக் கொள்ளும் மரபுண்டு. கஞ்சிபுரத்திலுள்ள குமரகோட்டத்து முருகனும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள படைவீடுகளில் உறைவதாக் கூறும் கந்தபுராண திருநகரப்படலக் (106) குறிப்பானது ஆறுபடைவீடுகளின் தனிச்சிறப்பை எடுத்துக்காட்டு வதாகவுள்ளது. "தனிகை வெற்பு" என்ற பெயர் முதன்முதலில் கந்தபுராணத்திலேயே காணப் படுகின்றதெனலாம். எமது சரீரத்தில் இருக்கின்ற ஆறு ஆதாரங்களுக்கு ஒப்பவே மண்ணுலகில் முருகனுக்கு ஆறுபடைவீடுகள் அமைந்து விளங்கு கின்றன எனச் சிலர் குறிப்பிடுகின்றனர்.

**மலையுறை கடவுள்**

முருகன் மலையும் மலைசார்ந்த நிலமு மாகிய குறிஞ்சிநிலக் கடவுளாக விளங்கியதைத் தொல்காப்பியம் (பொருள்.அகம்.நூ.5) குறிப்பிடு கின்றது. இவ்வாறே திருமுருகாற்றுப்படையும், கந்தபுராணமும் முருகன் மலையுறை கடவுளாக விளங்குவதை விளக்கி நிற்கின்றன. இவ்விரு நூல்கள் கூறும் திருப்பரங்குன்றம், திருவேரகம், திருவாவினன்குடி, குன்றுதோறிடல் என்ற படைவீடுகள் மலையுறை கடவுளாக முருகன், விளங்குவதைக் காட்டி நிற்கின்றன. "குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே" (217) "விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" (267) என்ற திருமுரு காற்றுப்படைக் குறிப்புகளும், கந்தபுராணம் கூறும் "குன்றுதோறாடியகுமர"/ (கடவுள் வாழ்த்து, 16) "கந்தவரை", (1:14:126) "கந்தவெற்பு", (5:4:1) "தணிகை மால்வரை", (6:24:418-220) "வேங்கடகிரி" (4:4:163:, 1:23:6) ஆகிய குறிப்புகளும் முருகன் மலையுறை கடவுள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. திருத் தணிகை முதலான நிலவுலகத்திலுள்ள மலைகளில் முருகன் உறைதலை திருநகரப்படலம் (பாடல் 106) குறிப்பிடுகின்றது. அத்துடன் முருகன் மலைமீது

கோயில் கொண்டு விளங்கும் சிறப்பினை கந்தபுராணத்தின் உற்பத்தி காண்டத்திலுள்ள தேவகிரிப்படலம் (1:21) தனியாகச் சித்தரிக்கின்றமை குறிப்பிடற்பாலதாகும்.

**முருகன் உறையும் பிற இடங்கள்**

முருகன் "ஆறுவீடுகள்" மலைகள் என்பவற்றில் மட்டுமன்றி இயற்கை எழில் நிறைந்த இடங்களிலெல்லாம் இருக்கின்றார் என நக்கீரர் கூறுகின்றார். காட்டிலும், சோலையிலும், அழகு பொருந்திய ஆற்றினுடக்குறையிலும், ஆறுகளிலும், குளங்களிலும், வேறுபட ஊர்களிலும், நாற் சந்தியிலும் , முச்சந்தி ஐஞ்சந்தியும், புதுமையாகிய பூக்களையுடைய கடம்பமரத்திலும், ஊருக்கு நடுவே எல்லாருமிருக்கும் மரத்தடியிலும், அம்பலத்திலும், ஆத்தீண்டுக்குற்றியுடைய இடத்திலும் முருகன் அமர்ந்துறைவானென்பது திருமுருகாற்றுப்படையில் பின்வருமாறு குறிப்படப்படுகின்றது.

**"காடுங்காவும் கவின்பெறு துருத்தியும்**
**யாறுங்கு ளனும் வேறுபல்வைப்பும்**
**சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங்கடம்பும்**
**மன்றமும் பொதியிலுங் கந்துடைநிலையிலும்"**
(திருமு.223-226) என வருகின்றது.

இம்மாதிரியே கந்தபுராணமும் முருகன் உலவுகின்ற இடங்களை

**"குளந்தினுல வுந்நதி குறைந்திடு துருத்திக்**
**களத்தினுல வும் நிரைகொள் கந்துடை நிலைத்தாந்**
**தளத்தினுல வும்பனவர் சாலையுல வும்..."(1:14:4)**

என நக்கீரரின் திருமுருகாற்றுப்படை நெறியில் குறிப்பிடுவது ஒப்புநோக்கற் பாலதாகும்.

**முருகனின் பெற்றோர்**

முருகன் சிவனின் நெற்றிக் கண்களிலிருந்து தோன்றியதாகக் கூறப்பெறினும் முருகன் தாய்த் தெய்வத்தினின்றும் தோன்றிய செய்தியை திருமுருகாற்றுப்படை முருகனை "மலைகள் மகனே" (257) "கொற்றவை சிறுவ" (258) "பழையோள் குழவி" (259), "அறுவர் பயந்த அறமர் செல்வ" (255) எனக் குறிப்பிடுகின்றது. கந்தபுராணமும் கந்தனை "இமையத்தவள் சேய்"(4:13:31) "உமை மகன்" (1:11:99), "கவுரி தன்குமரன்" (1:13:21) "கொற்றவை சிறுவ" (4:4:398),"அறுவரை அனையாகப் பெற்றோன்" (3:7:36) எனக் குறிப்பிடுவது ஒப்புநோக்கற்பாலதாகும். மேலும் முருகன் சிவன் மகன் என்பதை திருமுரு காற்றுப்படை ஓரிடத்தில் மட்டும்/ "ஆலமர் கடவுட்புதல்வ" (256) எனக்குறிப்பிடுகின்றது. கந்தபுராணத்தில் முருகன் சிவனுடைய மகன் என்ற குறிப்பு நூற்றி முப்பத்திமூன்று இடங்களிலும், முருகன் உமைமகன் என்ற செய்தி பதினான்கு இடங்களிலும் காணப்படுகின்றன (இராமலிங்கம், 1988:327 - 332). இவ்வாறு சக்தியினதும் சிவனதும் மகனாக இவ்விரு இலக்கியங்களும் முருகனைக் குறிப்பிடுகின்றமை ஒப்புநோக்கற்பாலதாகும்.

**முருகனின் மனைவியர்**

தெய்வயானையும், வள்ளியம்மையும் முருகனின் மனைவியர் என்பதை திருமுருகாற்றுப் படையும், கந்தபுராணமும் குறிப்பிடுகின்றன. தெய்வ யானையின் திருமணத்தை "மறுஇல்" கற்பின்வாள் நுதல் கணவன்" (6) என்றும், வள்ளியம்மையின் திருமணத்தை "வள்ளியொடு நகை அமர்ந்தன்றே" (102) எனவும் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. இவ்விரு திருமணங்களும் முறையே திருப்பரங் குன்றத்திலும், திருச்சீரலை வாயிலிலும் நிகழ்ந்த தாக திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது. முருகன் தெய்வ யானையின் கணவன் என்பதை "யானை நாமம் மின்னாயகன்" (6:24:265) என்றும், முருகன் வள்ளி மாணாளன் என்பதை "வேடர் நங்கை தன்னாயகண்" (6:24:265) என்றும் கந்தபுராணம் கூறுவது ஒப்புநோக்கற் பாலதாகும். மேலும் கந்தபுராணத்திலுள்ள "தெய்வ யானையம்மை திருமணப்படலமும் (5:2), வள்ளியம்மை திருமணப்படலமும் (6:24) இவ்விரு திருமணங்கள் பற்றி விரிவாக விளக்கி நிற்கின்றன. முருகனின் வள்ளி திருமணம் தமிழ் பண்பாட்டிற்கு ஓர் உரைக்கல்லாக இன்றும் கொள்ளத்தக்கது.

**வேல் வணக்கம்**

வேல் வணக்கம் மிகவும் தொன்மை வாய்ந்தது. பண்டைத்தமிழர் முருகனை வேல் வடிவத்தில் வணங்கினர். சிலப்பதிகாரம் கூறும் "வேற்கோட்டம்" (சிலம்பு 9:9-13) வேலுக்குரிய கோயிலாகும். வேல், முருகனின் தெய்வீகக் குறியீடு எனலாம். முருகன் சூரனை அழித்த கருணைச் செயல்கள் வேலின் வெற்றியாக திருமுருகாற்றுப் படை குறிப்பிடுகின்றது. முருகன் தனது வேலினால் சூரனைத் தடிந் செயலையே "சூர முதல் தடிந்த சுடர் இலைநெடுவேல்" (46) எனத் திருமுருகாற்றுப்படை மொழிகின்றது. முருகனுடைய வேலினை "வேல்" (265), "செவ்வேல்" (61), "எ∴கு" (11), "நெடுவேல்" (273,46) என்ற பெயர்களினாலும் நக்கீரர் குறிப்பிடுகின்றார். வேலின் வெற்றிச் சிறப்பை

**"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட**
**தீரவேல் செவ்வேல் திருக்கைவேல்–வாரி**
**குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் கன்றும்**
**துளைத்தவேல் உண்டே துணை"**

எனத் திருமுருகாற்றுப்படை வெண்பாவும் (3) கூறுகின்றமை நோக்கற்பாலதாகும். கந்தபுராணமும், வேலின் முதன்மையைப் புலப்படுத்தும் வகையில் "எப்படைக்கும் நாயகமானதொரு தனிச்சுடர் நெடுவேல்" (1:18:38) என மொழிகின்றது. மேலும் வேல் (6:24:265), "செவ்வேல்" (4:11:13), எஃகு (1:21:100) "சுடர்வேல்" (4:13:374), "நெடுவேல்" (4:13:256), "கொற்றவேல்" (3:12:49), "வீரவேல்" (4:2:19) என்ற பெயர்கள் கந்தபுராணத்திலும் காணப்படுகின்றமை ஒப்புநோக்கற் பாலதாகும். கந்தபுராணத்தில் வேல் முருகனுடைய ஆயுதமாக மட்டுமன்றி, முருகனின் வடிவமாகவே கூறப்பெற்றிருப்பது முக்கிய செய்தியாகும். "வேற்கடவுள்" (6:23:126), "கடவுட் செவ்வேல்" (4:13:483), தெய்வச் செவ்வேல் (4:13:482) உடம்பிடித் தெய்வம் (4:13:487) என்ற கந்தபுராணக் குறிப்புகள் வேல் முருகவடிவம் என்பதை நன்கு புலப்படுத்து கின்றன. சிறிய அளவிலான வேற் கோயில்கள் காணப்படினும், மூலஸ்தானத்தில் வேலைக் கொண்டுள்ள பெரிய அளவிலான வேற் கோயிலாக இன்று யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசாமி கோயில் விளங்குவது குறிப்பிடற்பாலதாகும்.

**போர்க்கடவுள்**

பண்டைத் தமிழர் முருகனை ஒரு போர்த் தெய்வமாக வணங்கினர். இதனை "போர்மிகு பொருந" (276), "செருவில் ஒருவ" (263), "பொருளிறல் மன்ன" (263), வில் தானைத்தலைவ" (260) ஆகிய திருமுருகாற்றுப்படை நாமங்கள் புலப்படுத்து கின்றன. கந்தபுராணமும் யுத்தத்தில் வெற்றி பெற்றுத் தரும் போர்க்கடவுளாகவே கந்தனைக் குறிப்பிடு கின்றது. கந்தபுராணம் கூறும் "சேனையற் தலைவன்" (5:5:4) "வீரவீரன்" (4:11:15) "விறல்மிகு ஆறுமுகன்" (1:18:37), "கொற்றவன்" (5:1:26) "விற்புலன்" (4:13:10) ஆகிய பெயர்கள் முருகன் போர்க்கடவுள் என்பதையே சுட்டிநிற்கின்றன எனலாம்.

**சூரனைக் கொன்றமை**

முருகன் சூரனைக் கொன்ற செயலினையே, திருமுருகாற்றுப்படை "சூர்முதல்தடிந்த சுடரிலை நெடுவேல்" (46) எனக் கூறுகின்றது. முருகன் சூரனைத் தடிந்த செயல் "சூரபன்மன் வதைப்படலம்" (4:13) என்ற ஒருப்படலமாகவே கந்தபுராணத்தில் காணப்படுகின்றது. சூரனை "சூர்" (2:12:43:, 2:10:8) என்ற சொல்லினால் கந்தபுராணம் சுட்டுவது இங்கு ஒப்பு நோக்கற்பாலதாகும்.

**முருகவழிபாடு முறைகள்**

முருகன் வேதாகம முறையிலும் அதற்குப் புறம்பான வழிகளிலும் வழிபடப்பட்டதை திருமுரு காற்றுப்படையும் கந்தபுராணமும் குறிப்பிடு கின்றன. முருகனை வேள்ளிவேட்டும், உச்சியில் தலைகு வித்தும், திருப்பாதங்களில் வீழ்ந்தும் வணங்கியதை திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது. சிறிய தினை அரிசியை மலரொடு கலந்து வைத்தும் ஆட்டினை அறுத்தும் கோழிக்கொடியுடன் முருகனை வரிசைப் பட நிறுத்தியும் முருகனை வழிபட்டனரென்பதை

**"சிறுதினை மலரொடு விரை, மறிஅறுத்து**
**வாரணக் கொடியொடு வயிற்பட நிறி"**
**(திருமு. 218–219)**

என்ற திருமுருகாற்றுப்படை வரிகளாலறி யலாம். மேலும் மிகுந்த வலிமை பொருந்திய கால் களையுடைய கொழுத்த ஆட்டுக் கடாவை வெட்டி அதன் குருதியில் நுண்ணிய வெண்மையான அரிசியைக் கலந்து அவற்றைப் பிரப்பங்கூடைகளில் பலியுணவாதுப் படையல் செய்து முருகனை வழிபட்ட செய்தியை திருமுருகாற்றுப்படை

**"மதவலி நிலை இயமாத்தாள் கொழுவிடைக்**
**குருதி யொடுவிரைஇத் தூவெள்ளரிசி**
**சில் பலிச் செய்து பல் பிரப்புஇரீஇச்**
**(திருமு.232–234)**

எனக் குறிப்பிடுகின்றது. கந்தபுராணமும் முருகனுக்குப் பலியை இட்டு வெண்ணிறம் பொருந் திய அரிசி, மஞ்சள்மா, மலர் ஆகியவை களைத் தூவி ஆட்டைவெட்டி முருகனுக்கு நடத்திய விழாவினைக்

**"காலை யதற்பின் கடவுட்பலி செலுத்தி**
**வாலரிசி மஞ்சள் மலர்ச்சிந்தி மறியறுத்துக்**
**கோல நெடுவேற் குமரன் விழாக் கொண்டாடி"**
**(6:24:40)**

எனக் கூறுவது ஒப்புநோக்கற்பாலதாகும்.

**வேலன் வெறியாட்டு**

முருகவழிபாட்டில் இடம்பெறும் "வேலன் வெறியாட்டினை" இவ்விருசால்களும் குறிப்பிடு கின்றன. முருகன் வேலன் மேல் வந்து தோன்றி யாடும் வேலன் வெறியாட்டு/வழிபாட்டையே திருமுரு காற்றுப்படை.

**"வேலன் தைஇய அயர்காணும்" (திருமு.222)**

எனக் கூறுகின்றது. கந்தபுராணமும், "முருகனை முற்கொண்டு நிகழ்த்தப்படும் வெறியாட் டத்தை" "வேலனை முற்கொண்டு வெறியாட்டு நேர் வித்தான்" (6:24:40) எனக் கூறுவது ஒப்புநோக்கற் பாலதாகும்.

**குரவைக் கூத்து**

முருகவழிபாட்டில் குரவைப் கூத்து சிறப்புற் றிருந்ததை திருமுருகாற்றுப்படையும், கந்த புராணமும் புலப்படுத்துகின்றன. குறவர்கள் தமது சுற்றத்தாருடன் மகிழ்ந்திருந்து குரவைக் கூத் தாடினார் என்பதை "குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து தொண்டகச் சிறுபறைக் குரவை அயர" (196-197) எனத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது. கந்தபுராணமும் பெரிய கால்களையுடைய கடாவை வெட்டி தனது சுற்றதோடு இனிதாக விருந்தருந்தி தொன்டகப்பறை ஒலிக்க குரவைக் கூத்தாடி முரு கனை நம்பியரசன் வழிபட்ட செய்தியை

**"...................... தாட் கொழுவிடையைக்**
**கெண்டி யொருதன் கிளையோ டினி தருந்தித்**
**தொண்டகம தார்ப்பக் குரவைமுறை**
**துங்குவித்தான்" (6:24:39)**

எனக் கூறுவது ஒப்புநோக்கற்பாலதாகும்.

**முருக நாமங்கள்**

முருகனது தெய்வீகப் பெருமைகளை விவரிக்கும் முருக நாமங்களும் முருக சொற்றொடர் களுமாக திருமுருகாற்றுப்படை "அறுவர் பயந்த ஆறமர் செல்வ, கடவுட் புதல்வ, மலைமகள் மகனே, மாற்றோர் கூற்றே, கொற்றவை சிறுவ, பழையோன் குழவி, தானைத்தலைவ, மாலை மார்ப, நூல்அறி புலவ, செருவில் ஒருவ, பொருநிறல்மள்ள, அந்தணர் வெறுக்கை, அறிந்தோர் சொல்மலை, மங்கையர் கலை, மைந்தர்ஏழே, பெருஞ்செல்வ, குறிஞ்சிக்கிழவ, புலவர்ஏறே, அரும்பெறல்மரபிற் பெரும் முருக இசைபேராள, சேஎய், நெடுவே என் பெரும் பெயர் இயவுள், மதவலி, போர்மிகு பொருநகுரிசில் 255 - 276) என்பவற்றைக் குறிப்பிடுகின்றது. கந்தபுராணம் கூறும் கொற்றவை சிறவ (4:4:398), தமிழ்ப்புலவ (4:12:456), தடக்கை வேலுடை அண்ணல் (3:7:34), சேனையந்தலைவ (5:4:4) செல்வ (4:7:30) மலர் மாலை புனைந்தந்தை (1:14:82), அலங்கல் மார்ப (4:13:446), நெடுவேல் முருகன் (4:3:79) முதலிய நாமங்கள் சிறப்பாக ஒப்பு நோக்குதற்குரியவை. நுணுகி நோக்கும் போது கந்தபுராணம் கூறும் முருக நாமங்கள் பலவற்றிற்கு திருமுருகாற்றுப்படையில் வரும் நாமங்கள் அடிப்படையாக உள்ளமை தெளிவாகின்றது.

**முருகனின் மந்திரம்**

திருமுருகாற்றுப்படை முருகனுடைய ஆறெழுத்து மந்திரத்தை

**"ஆறெழுத்து அடங்கிய அருமறைக்கேள்வி**
**நாஇயல் மருங்கின் நவிலப்பாடி"**
**(திருமு. 186 – 187)**

எனக் குறிப்பிடுகின்றது. "நம:குமாராய" என்பதே ஆறெழுத்து மந்திரம் என நச்சினார்க் கினியர் குறிப்பிடுகின்றார். (துரை அரங்கசாமி : 1972 : 175) "முருக" (269) என்ற மூன்றெழுத்தை பெரும் பெயர் எனத் திருமுருகாற்றுப்படை கூறுவதால் "முருக" என்பதை முருகனின் மந்திரமாகக் கொள்ளலாம். "முருகன்" என்ற பெயர் கந்த புராணத்தில் இருபத்தெட்டு இடங்களில் இடம் பெற்றுள்ளமை (இராமலிங்கம் : 1988 : 365) ஒப்பு நோக்குதற்பாலதாகும். "சரவணபவ" என்பதை முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரமாகக் கொள்வதற்கும் இவ்விரு இலக்கியங்களும் துணைபுரிகின்றன.

**வழிபாட்டின் பயன்**


முருக வழிபாட்டினால் பெறலரும் பரிசாகிய முக்திப் பேரின்பம் கிடைக்கும் என்பதைத் திருமுருகாற்றுப்படை.

**"இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து**
**ஒரு நீ ஆகித் தோன்ற விழுமிய**
**பெறலரும் பரிசில் நல் குமதி:**
**(திருமு. 293 – 295)**

என மொழிதலாலறியலாம். ஆன்மாக்களின் பிறவிப் பிணியை நீக்கி முக்தி கொடுப்பவன் கந்தனே என்பதைக் கந்தபுராணமும்,

**" கல்தைங் குறைந்த செவ்வேற் கந்தனோர் தருவதாகி**
**வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்**
**பல்லுயிர்க் கருளைப் பூர்த்துப் பவநெறி காய்த்திட்டன்பர்**
**எல்லவர் தமக்கு முத்தி இருங்கனி உதவும் என்றும்"**

எனக் கூறுவது ஒப்புநோக்கற்பாலதாகும்.



பதிவு இல : VESS / 01 Regd No : VESS / 01



# ஞானசம்பந்தர் இல்லம்

## பாதிப்புற்ற சிறார்களுக்கான பராமரிப்பு நிலையம்

# GNANASAMBANDHAR ILLAM

## A home for the affected, needy children

URUMPIRAI. உரும்பிராய்.

Date : ..../ ..../ 201....

*President :*

**A.Panchalingam**
(Kopay Road, Urumpirai
T.P 077 6565258)

*Vice Presidents :*

**Mr. T. Thirunavukarasu**

*Secretary :*

**Mr. P.Balamuhunthan**
(Kalasalai Road, Thirunelvely
T.P 0773867458)

*Assistant Secretary :*

**Mr. M Sritharan**

*Treasurer :*

**Prof. P. Sivanathan**
(Dear Facirlty University of Jaffna)

நல்லிணக்கத்தின் எடுத்துக்காட்டாக தெல்லிப்பளையில் அரசாங்கத்தினால் பல வருடங்களாக காணியும் இல்லாமல் அலைந்து திரிந்த நலிவுற்ற மக்களுக்காக ஒரு குடியேற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு 132 வீடுகள் அமைக்கப்பட்டு அவற்றில் மக்கள் குடியமர்ந்துள்ளனர். அக்குடியேற்றத்தில் முன் பள்ளிக்கென்று ஒரு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது. குடியேற்றத்தில் உள்ள மக்கள் பல வருட இடப்பெயர்வின் காரணமாக கல்வியை இழந்து கல்வியின் பெறுமானத்தையே உணர்வதில்லை. அம் மக்களின் பிள்ளைகளுக்காக முன்பள்ளி ஒன்று இருக்கின்ற போது அதனை சிறப்பாக நடத்துவதற்கு சிறந்த ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர் அப்படியான ஆசிரியர்களிற்கு கௌரவமான வேலை வழங்கி அவர்களை குறிப்பிட்ட முன்பள்ளியின் ஈடுபடுத்துவது விரும்பத்தக்கது அத்துடன் பிள்ளைகளுக்கான உபகரணங்கள் கதிரை மேசை தவிர்ந்த வேறு தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள் யாவும் தேவைப்படுகிறது.

முன்பள்ளியின் தேவையைக் கருத்தில் கொண்டு ஞான சம்பந்தர் இல்லம் என்னும் அமைப்பினால் நாம் இயன்றளவு உதவிகளை செய்து வருகின்றோம். முக்கியமாக ஆசிரியர்களின் சம்பளம், மதிய உணவுகளுக்குமான உணவுப்பொருட்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. ஆனால் அவற்றை சுகாதார முறைப்படி தயாரித்து பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு பொருத்தமான கட்டடம் இல்லை. சமையல் பாத்திரங்களும் இல்லை. குடியிருப்பில் இருக்கும் ஓர் அம்மாவின் வீட்டில் தான் சமையல் செய்யப்படுகின்றது. எமக்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள் பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கொமர்சல் வங்கி இல:-

C/A – 1060013071

S/A - 8600925575



விஜிதா
VIJITHA
யாழ்ப்பாண
சிகப்பு நாடு
நம் - 1 ஆட்டக்காறி
Free From Black Seeds & Sand Stones
கல் மணல் நீக்கப்பட்டது.
தாவடி தெற்கு
கொக்குவில்.
077 332 4409
021 222 6658




ERIC GANESH
OPTICALS
HEAD OFFICE:
566, Hospital Road, Jaffna.
021 222 2486
BRANCHES:
107, K.K.S Road, Chunnagam.
K.K.S Road,
Kokuvil.
021 222 5233




முருகன்
புடவையகம்
எம்மிடம் அனைத்துவகையான
பாடசாலைச் சீருடைகளினையும்
மலிவான விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
06, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5757



## "இந்துமுகம்" இந்துமதத்தின் முகமாக அமைய வாழ்த்துகிறேன்.

இந்து மதம் ஒரு மகா சமுத்திரம். சமுத்திரத்தின் ஆழத்தையும் அகலத்தையும் இதுவரை யாரும் காண முடிந்ததில்லை என்பது போல் இந்து மதத்தோன்றலையும். தொன்மையையும் இதுவரை யாரும் கண்டறிந் ததில்லை.

"இந்துமதத்தை யாரும் உருவாக்கவில்லை
இந்துமதத்தை ஒருவர் மக்களுக்கு அறிவிக்கவில்லை
ஒருமதாசாரியரை இந்துமதம் பெற்றிருக்கவில்லை"

DAN TELEVISION

இந்த மதத்தின் தத்துவங்கள் வழிமுறைகளைப் பற்றி எண்ணிலடங்கா சான்றோர்கள் அவ்வப்போது தோன்றி ஏராளமான விளக்கங்களைச் சொல்லி வந்துள்ளார்கள் சொல்லியும் வருகிறார்கள். அந்த வகையில் நல்லைக் கந்தப் பெருமானுடைய மகோற்சவ காலத்தில் யாழ்ப்பாணத்தில் "இந்துமுகம்" வெளிவருவதும் யாவரும் அறிந்ததே. உற்சவ கால வெளியீட்டு வைபவத்தை எங்கள் ஓம் T.V நேரடி ஒளிபரப்பு வளாகத்தில் இந்துமுகம் ஆன்மீக சஞ்சிகையின் பணிப்பாளர் க.பாலமுகுந்தன் ஆசிரியர் வெளியீடு செய்வார். அவ்வெளியீடு எங்கள் டான் குழுமத்தின் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன் முன்னிலையில் நடைபெறும். இந்நிகழ்வுகளை டான். ஓம் தொலைக் காட்சியின் நேர்முகவர்ணனையாளர் மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் நெறிப்படுத்துவார்.

"இந்துமுகமும் இந்துமதத்தின் முகமாக" அமைய இந்துமதத்தின் மகத்துவங்களை. அரிய தத்துவங்களை உலகமெங்கும் பரப்ப டான் குழுமத்தின் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**இவ்வண்ணம்**
**இளையதம்பி-செல்வச்சந்திரன்**
**டான்குழுமம்.**